பக்கங்கள்: 20

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஆவணி 19 ஞாயிற்றுக்கிழமை 04.09.2022 கதிர் 301

### இனி இது ரகசியம் அல்ல!

'கைக்கு எட்டியும் வாய்க்கு எட்டாமல் போனமை மாதிரி' யாழ் மாநகர சபைக்குக் கழிவுகளை அகற்றுவதற்குக் கிடைக்கவிருந்த ஜப்பானின் நான்கு வாகனங்கள், கடைசியில் கிடைக்காமல் போன சூழ்நிலையில் மீண்டும் அவை ☞2

## அரசியல் கைதிகள் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம்:

# ஜனாதிபதி ரணிலுடன் ரெலோ அவசர சந்திப்பு



### செல்வம், ஜனா, சுரேன் ஆகியோர் பங்கேற்பு

ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் ரெலோ தலைவர்கள் நேற்று அவசர சந்திப்பை மேற்கொண்டனர் என்று அக்கட்சியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் ரெலோவின் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இந்தச் சந்திப்பில் அரசியல் கைதிகள் விடுதலை, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர், கல்முனை வடக்கு பிரதேச செயலகம், மீனவர்கள் மற்றும் விவசாயிகள் எதிர்கொள்ளும் அவசர பிரச்சினைகள் ஆகிய விடயங்கள் முக்கியத்துவம் பெற்றன. ☞19

## கோட்டாவுக்குப் புதிய பாதுகாப்புப் பிரிவு

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்குப் புதிய பாதுகாப்பு பிரிவு ஒன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் இராணுவத்தினர் அடங்கிய வகையில் இந்தப் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

மக்களின் மாபெரும் எதிர்ப்புப் போராட்டங்களையடுத்து இலங்கையைவிட்டுத் தப்பியோடி ஜனாதிபதி பதவியை இராஜிநாமா செய்த நிலையில் வெளிநாடுகளில் ☞19



## அத்தியாவசிய சேவைகளை பிரகடனப்படுத்தினார் ரணில்

### அதிவிசேட வர்த்தமானியும் வெளியீடு

மின்சாரம் உள்ளிட்ட சில சேவைகளை அத்தியாவசிய சேவைகளாக அறிவித்து அதிவிசேட வர்த்தமானி வெளயிடப்பட்டுள்ளது.

நேற்றிலிருந்து அமுலாகும் வகையில் ஜனாதிபதி ☞19



## கோட்டாவுக்குத் தேவையான வசதியை வழங்கத் தீர்மானம்

### ஜனாதிபதியின் செயலாளர் தெரிவிப்பு



முன்னாள்ஜனாதிபதிஒருவருக்கு வழங்கப்படும் சிறப்புரிமைகளின் கீழ் கோட்டாபய ராஜபக்ஷவுக்குத் தேவையான வசதிகள் வழங்கப்படும் என்று ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க தெரிவித்தார்.

முன்னாள்ஜனாதிபதிகோட்டாபய ராஜபக்ஷ நேற்று முன்தினம் நள்ளிரவு நாடு திரும்பினார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம்கருத்துரைக்கும்போதே ஜனாதிபதியின் செயலாளர் மேற்கண்டவாறு கூறினார்.

## தொலைபேசி கட்டணங்கள் அதிகரிப்பு



தொலைபேசி மற்றும் கையடக்கத் தொலைபேசி கட்டணங்களை 20 ☞19

## ஜெனிவாவில் இலங்கைக்கு முட்டுக்கொடுக்கின்றது சீனா

### முன்னாள் எம்.பி. சரா சீற்றம்

ஈழத் தமிழர்களுக்கு உதவி செய்யாவிட்டாலும் பரவாயில்லை, உபத்திரவம்கொடுக்காமல் சீனா ஒதுங்கியிருக்கலாம். அதைவிடுத்து மேற்கு நாடுகளுடனும், இந்தியாவுடனும் முரண்படுவதாக ☞2



## நாணய நிதிய உடன்படிக்கைக்கு ஐரோப்பிய ஒன்றியம் வரவேற்பு

சர்வதேச நாணய நிதியத்துக்கும் இலங்கைக்கும் இடையிலான பணியாளர் மட்ட ஒப்பந்தத்தை வரவேற்பதாக ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான பிரதிநிதிகள் குழு தெரிவித்துள்ளது.

டுவிட்டர் செய்தி ஒன்றில் இந்த உடன்படிக்கையை ஐரோப்பிய ஒன்றியம் வரவேற்றுள்ளது.

அத்துடன் பொது நிதி மேலாண்மை மற்றும் ஏற்றுமதி தொழில்கள் ☞19

## மீண்டும் 'டெங்கு'



இலங்கையில் நிலவும் சீரற்ற காலநிலையால் டெங்குநோயாளர்களின் எண்ணிக்கை ☞2

## தொண்டமானாறு ஆற்றில் முதலைகள்; பக்தர்கள் அவதானமாக நீராட வேண்டும்

### செல்வச்சந்நிதி ஆலய நிர்வாகம் அறிவுறுத்து

யாழ்., வடமராட்சி - தொண்டமானாறு ஆற்றில் நீராடுபவர்களை அவதானமாகச் செயற்படுமாறு தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலய நிர்வாகம் அறிவுறுத்தியுள்ளது.

தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த மகோற்சவம் தற்போது இடம்பெற்று ☞2

## இலங்கைக்கு உதவுமாறு பகிரங்க கோரிக்கை விடுக்கின்றது இந்தியா



இலங்கைக்கு உதவுமாறு இந்தியா வெளிப்படையாகக் கோரி வருகின்றது என இந்திய வெளிவிவகார அமைச்சின் உத்தியோகபூர்வ பேச்சாளர் அரிந்தம் பாக்சி தெரிவித்துள்ளார்.

இலங்கையும் சர்வதேச நாணய நிதியமும் பணியாளர்நிலைஉடன்படிக்கையை எட்டியுள்ளமை குறித்து கருத்துத் தெரிவித்த அவர், அது எப்படி முன்னேறுகின்றது என்பதை இந்தியா அவதானிக்கின்றது ☞19

## போதைப்பொருள் கடத்தல்காரரின் உதவியாளர் வசமாகச் சிக்கினார்!

வெளிநாட்டில் இருந்தவாறு இலங்கையில் போதைப் பொருள் கடத்தலை முன்னெடுக்கும் 'குடு சலிந்து' என்ற சலிந்து கருணாரத்னவின் உதவியாளர் ஒருவர் வாத்துவ பகுதியில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மனிதக் கொலை ஒன்றைச் செய்யும் நோக்கில், கூரிய ஆயுதம் ஒன்றை தம்வசம் ☞2

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யாழ்மாநகர சபைக்குக் கிட்டுவதற்கான வாய்ப்புகள் அரும்பி இருக்கிறன என இப்போது தெரிகின்றது.

தமிழ்க் கூட்டமைப்பின் பங்காளி கட்சியான ரெலோ எடுத்த முயற்சி பலனளிக்கும் வாய்ப்பைப் பெற்றுத் தந்திருக்கிறது.

நேற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நேரில் சந்தித்த ரெலோ உயர் மட்டகுழு, இந்த விடயத்தையும் அவரின் கவனத்திற்குக் கொண்டு போனமையை அடுத்து அந்தச் சிக்கலைத் தீர்த்து, வாகனத்தைப் பெற்றுத் தருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள ஜனாதிபதி உறுதி அளித்தார் எனத் தெரிய வந்தது.

இவ்விடயம் தொடர்பில், ஜப்பானில் இருந்து வந்து, நான்கு வருடங்கள் வங்கிக் கணக்கில் தேங்கிக் கிடக்கும் நிதியை திருப்பி ஜப்பான் தூதரகத்துக்கு அனுப்பி விவகாரத்தை அத்தோடு முடித்து விடுவதற்கான உத்தரவை வடக்கு ஆளுநர் வழங்கியமை அடுத்து, இந்த விவகாரம் முழுமையாகக் கையை விட்டுப் போய் விட்டதாகத்தான் கருதப்பட்டது. இந்த நிலையில் நேற்று சரியான சந்தர்ப்பம் பார்த்து காய் நகர்த்தி, விடயத்துக்கு உயிரூட்டியுள்ளது ரெலோ உயர்மட்ட குழு.

யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு ஜப்பானில் இரண்டு வருடங்கள் பாவித்த 4 கொம்பக்ட் வாகனங்களை வழங்க ஜப்பான் தூதரகம் 2019 ஆம் ஆண்டு இணக்கம் தெரிவித்து அதற்கான ஒப்பந்தம் ஒன்றையும் மேற்கொண்டது.

இதற்கமைய வாகனங்களை இலவசமாக வழங்கும் ஜப்பான் தூதரகம், அவற்றை இலங்கை நாட்டிற்குள் கொண்டு வருவதற்கான செலவு மற்றும் சுங்கத் தீர்வை ஆகியவற்றை யாழ்ப்பாணம் மாநகர சபை சார்பில் செலுத்துவதற்காக ஒரு கோடியே 43 லட்சத்து 26 ஆயிரத்து 466 ரூபாவையும் ஜப்பான் தூதரகம் மாநகர சபையிடம் வழங்கியிருந்தது.

இருந்தபோதும் இலங்கை அரச திணைக்கள அனுமதி பெறுவதில் இருந்த தடைகள் காரணமாக இதுவரை வாகனங்கள் தருவிக்கப்படவில்லை.

யாழ் மாநகர ஆணையாளர் கடந்த 2022-05-05 அன்று ஜப்பான் தூதரகத்திற்கு எழுதிய கடிதத்தில் இத்திட்டத்தில் இருந்த விலக சபை தீர்மானித்துள்ளதனால் நிதியை மீளப் பெறுமாறு கோரியிருந்தார்.

ஆணையாளரின் கடிதம் சார்பில் ஜப்பான் தூதரகம் இத்திட்டத்தை இரத்து செய்வதாக குறிப்பிட்டதோடு, வழங்கிய நிதியையும் மீளக் கோரியிருந்தனர். இவ் விடயம் செய்தியாகியமையால் தற்போது பெரும் பரபரப்பாகியுள்ளது.

ஜப்பான் தூதரக அதிகாரிகளுடன் மீளப் பேசி, அவர்களின் ஒப்புதலைப் பெற முடியுமா என அறிந்து கூறினால் நிதி அமைச்சர் என்ற வகையில் அதன் கீழ் உள்ள திணைக்களங்களுடன் பேசி அடுத்த கட்டத்திற்கு விடயத்தைக் கொண்டு செல்ல முடியும் என ஜனாதிபதி ரணில் பதிலளித்துள்ளார்.

- மின்னல் -

## மீண்டும் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அதிகரித்துள்ளது என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 53 ஆயிரத்து 901 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சமூக வைத்திய நிபுணர் வைத்தியர் இந்திக்க வீரசிங்க தெரிவித்துள்ளார்

அத்துடன், 60 சதவீதத்துக்கும் அதிகமான டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை மேல்மாகாணத்தில் பதிவாகியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவற்றில் அதிகமானோர் கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்று சமூக வைத்திய நிபுணர் வைத்தியர் இந்திக்க வீரசிங்க தெரிவித்துள்ளார்.

## ஜெனிவாவில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நினைத்துக் கொண்டு தமிழ் மக்களை வதைக்கும் வகையில் நடந்துகொள்கிறது. கடன் வாங்கிய சிங்கள தேசத்துடன் - இலங்கை அரசுடன் மாத்திரம் தனது நாட்டாண்மையை சீனா மட்டுப்படுத்திக் கொண்டால் நன்று.

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தரும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய ஈ.சரவணபவன் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான சீனத் தூதுவர் அண்மையில் வெளியிட்டுள்ள சர்ச்சைக்குரிய கருத்துக்கள் தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

மனித உரிமை விவகாரங்களை முகமூடியாக பாவித்து சில நாடுகள் இலங்கை விவகாரத்தில் தலையிடுகின்றன என்று சீனத் தூதுவர் குற்றம் சுமத்துகின்றார். இது சட்டியைப் பார்த்து பானை கறுப்பு என்ற கதையைப்போல் உள்ளது. கடன் பொறியால் ஒரு நாட்டைக் கபளீகரம் செய்யும் சீனா, இதுபோன்று குற்றம் சுமத்துவதற்கு எந்த அருகதையும் அற்றது.

அமிர்தலிங்கம் ஐயாவின் ஜனன நினைவு தின நிகழ்வில் கடந்த வாரம் நான் ஓர் விடயத்தைச் சுட்டிக்காட்டியிருந்தேன். சீனாவின் உளவுக் கப்பலின் வருகையோடு இலங்கையைச் சுற்றிய பூகோள அரசியல் கொதிநிலைக்குச் சென்றுள்ளது. அதைநிரூபிக்கும்வகையிலேயே சம்பவங்கள் அரங்கேறிக் கொண்டிருக்கின்றன.

இலங்கைக்கு சீன உளவுக் கப்பல் வந்து சென்றிருந்தாலும் அந்த விடயத்தில் சீனா சில பின்னடைவுகளைச் சந்திருப்பதால், இந்தியா மற்றும் மேற்கு நாடுகள் மீது சீறிப் பாய்திருந்தது.

இலங்கையில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு ஆபாந்தவர்களாக இந்தத் தரப்புக்களே இப்போது இருப்பதால், அவர்களைச் சீண்டுவது என்பது ஒருவகையில் தமிழ் மக்களைச் சீண்டுவதற்கு சமதையானதே.

அதற்கும் மேலாக, பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் நீதிக்கான நீண்ட நெடிய பயணத்தில் இதுவரையில் பங்காளர்களாக இருந்து வருபவர்களும் அந்தத் தரப்பினரே.

அந்தத் தரப்புக்கள் கையில் எடுத்துள்ள மனித உரிமை விவகாரத்தை, நையாண்டி செய்து அல்லது கீழ்த்தரமான முறையில் விமர்சித்து அவற்றைக் கைவிடச் செய்யலாம் என்று சீனா கனவிலும் நினைக்கக் கூடாது.

இதுவரை ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை அரசுக்கு முட்டுக் கொடுத்துவருவது சீனா.

பாதிக்கப்பட்ட தமிழ் தரப்புக்கள் சில சந்தர்ப்பங்களில் இந்த விடயங்களில் உதவிகோரியபோது, ஒரு நாட்டின் உள் விவகாரங்களில் தலையிடுவது தமது கொள்கையல்ல என்று சீனா பலமுறை சொல்லியிருக்கின்றது. ஆனால், இலங்கை அரசுக்குத் தனது கொள்கையை மீறி பல தடவைகள் உதவியிருக்கின்றது. இன்னமும் உதவிக் கொண்டிருக்கின்றது.

தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலையில், மனித உரிமை விவகாரம் அவசியம்தானா என்று சீனத் தூதுவர் கேள்வி எழுப்பியிருந்தார். மனித உரிமைகள் தொடர்பில் பேசுவதற்கு தகுதியற்றவர்கள் அவர்கள். ஆனாலும், இப்போது மனித உரிமை விவகாரம் அவசியமா என்று கேள்வி எழுப்பும் தூதுவர், தமிழ் மக்களின் நீதிக்கான பயணம் இன்னமும் முடிவுறாமல் இருப்பதற்கு தாங்களும் ஓர் காரணம் என்பதை ஒப்புக்கொள்ளவேண்டும்.

இலங்கையை கட்டுப்படுத்தி இந்தியாவுக்கு குடைச்சல் கொடுப்பதற்காக, சிறிலங்கா அரசாங்கத்துக்கு கண்மூடித்தனமாக ஆதரவை சீனா வழங்கி வந்துகொண்டிருக்கின்றது. அதன் விளைவுகளாலேயே இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ளது பொருளாதார நெருக்கடி.

தங்களால் ஏற்படுத்தப்பட்ட நெருக்கடிகளைச் சாட்டாக முன்வைத்து, தமிழ் மக்களின் விடயங்களை நீர்த்துப்போகச் செய்யும் நிகழ்ச்சி நிரலை முன்னெடுக்கும் சீனாவை ஒதுக்கவேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இருந்த காலத்தில் தமிழர் தாயகத்தில் தலையெடுத்தும் பார்த்திராத சீனா, இப்போது மெல்லமெல்ல, தமிழர்களுக்குகைகொடுக்கும் இந்தியாவுக்கு குடைச்சல் கொடுப்பதற்காக, தமிழ் மக்களுக்கு உதவுகின்றோம் என்ற போர்வையில் நுழைய முயல்கின்றார்கள். எங்கள் கையை வைத்தே எங்களின் கண்ணை குத்த நினைக்கிறார்கள்.

ஆனால், அவர்களின் உண்மை முகம் சீனத் தூதுவரின் கருத்தின் ஊடாக அம்பலப்பட்டிருக்கின்றது. எனவே எத்தகைய முகமூடியுடனும் எமது தேசத்தில் கால் பதிக்க சீனாவை அனுமதிக்கக் கூடாது, அனுமதிக்கவும் முடியாது - என்றுள்ளது.

## தொண்டமானாறு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வருகின்றது.

ஆலய மகோற்சவத்துக்கு வெளிநாடுகளிலிருந்தும் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் பக்தர்கள் பலர் வருகை தருகின்றனர்.

இந்தநிலையில், செல்வச்சந்நிதி ஆலயத்துக்குப் பின்புறமாக உள்ள ஆற்றில் முதலைகள் இருப்பது தொடர்பில் தகவல் கிடைக்கப் பெற்றுள்ளது எனவும், இதன் காரணமாக அங்கு நீராடுபவர்கள் அவதானமாகச் செயற்பட வேண்டும் எனவும் ஆலய நிர்வாகம் கேட்டுக்கொண்டுள்ளது.

## போதைப்பொருள் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வைத்திருந்த நபர் ஒருவர், பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

இதையடுத்து, அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில், அவர் குடுசலிந்து என்பவரின் உதவியாளர் என்பது கண்டறியப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் - 076 443 8622






# மலையக மக்களின் பிரச்சினைகளுக்கு ஜனாதிபதி தீர்வைப் பெற்றுக்கொடுப்பார்!

## ராமேஷ்வரன் நம்பிக்கை

மலையக பெருந்தோட்டப் பகுதிகளில் தரிசு நிலங்களாக உள்ள காணிகளை மலையக மக்களுக்கு வழங்குவதாக வாக்குறுதிகள் மட்டுமே வழங்கப்பட்டுள்ள நிலையில் அது தொடர்பில் எந்த நடவடிக்கையும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. அதனால் அரசாங்கம் இது தொடர்பில் உரிய கவனம் செலுத்த வேண்டும் என மருதபாண்டி ராமேஷ்வரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற இடைக்கால வரவு – செலவுத் திட்டம் மீதான இறுதிநாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

வறிய குடும்பங்களுக்கு அரசாங்கத்தால் வழங்கப்படும் கொடுப்பனவுகள் தொடர்பில் ஜனாதிபதி இடைக்கால வரவு – செலவுத் திட்டத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அத்தகைய கொடுப்பனவுகள் தோட்டத் தொழிலாளர்களுக்கும் வழங்கப்பட வேண்டும். விவசாயத்துறையின் வீழ்ச்சி காரணமாகவே நாட்டில் நெருக்கடி நிலை ஏற்பட்டது எனக் கூறப்படுகிறது.

அந்த வகையில் நுவரெலியா மாவட்ட விவசாயிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும்.

அத்துடன் மலையகப் பெருந்தோட்டப் பகுதிகளில் தரிசு நிலங்களாக உள்ள காணிகளை மலையக மக்களுக்கு வழங்குவதாக அரசாங்கம் தெரிவித்திருந்தது.

ஆனால், அவ்வாறான காணிகளை அந்த மக்களுக்கு வழங்குவது தொடர்பில் எந்த நடவடிக்கையும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. அதனால் அரசாங்கம் இது தொடர்பில் உரிய கவனம் செலுத்த வேண்டும்.



மேலும் பொருளாதார நெருக்கடி காரணமாக மலையகமக்கள்பல்வேறுபிரச்சினைகளுக்குமுகம்கொடுத்து வருகின்றனர். என்றாலும் மலையக மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்வு பெற்றுத் தருவார் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கின்றது. – என்றார்.

# தகவல் அறியும் உரிமைக்கு புதிய அணுகுமுறை அறிமுகம்

அரச நிறுவனங்களிடமிருந்து தகவல்களைப் பெறுவதில் ஏற்படும் தாமதங்களைத் தவிர்ப்பதற்காக புதிய அணுகுமுறையொன்றை அறிமுகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தகவல் பெறுவதற்காக விண்ணப்பப்படிவத்தை அனுப்பும் போது முகவரியுடன், தொலைபேசி இலக்கம், வட்ஸ்அப் இலக்கம், மின்னஞ்சல் முகவரி ஆகியவற்றையும் குறிப்பிடுமாறு பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு, விண்ணப்பதாரிகளைக் கோரியுள்ளது.

கடிதங்கள் மூலம் கோரப்படும் தகவல்களை அனுப்புவதில் ஏற்படக்கூடிய காலதாமதத்தைத் தவிர்ப்பதே இதன் முக்கிய நோக்கமாகும்.

ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க மற்றும் அமைச்சுக்களின் செயலாளர்களுக்கிடையில் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற சந்திப்பில் இந்தத் தகவல்கள் தெரிவிக்கப்பட்டன.

பொதுமக்களின் வசதிக்காக செயற்படுவது அனைத்து அமைச்சுக்களினதும் அரச அதிகாரிகளினதும் தலையாய பொறுப்பாகும்.

எனவே எந்தவொரு நபருக்கும் இடையூறு ஏற்படாத வகையில், செயல்திறன்மிக்க சேவையை வழங்க வேண்டும்.

இதன் மூலம் அமைச்சுக்கள் மற்றும் அரச நிறுவனங்கள் முறையான பதில் அளிக்கும் வேலைத்திட்டத்தை உருவாக்குவது கட்டாயம் என ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும் அறிவித்துள்ளார்.

மேலும், ஜனாதிபதி செயலகத்திடம் இருந்து தகவல்களைக் கோரும் போதும் இந்த செயல் முறையைப் பின்பற்றுமாறு மக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

2019 ஆம் ஆண்டு முதல் ஜனாதிபதியின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் (சட்டம்) சிசிர ஹேனாதிர, தகவல் அதிகாரியாக செயற்பட்டு வருகின்றார்.

அத்துடன் ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் கலாநிதி சுலக்சன ஜயவர்தன பதில் அதிகாரியாக செயற்படுகின்றார்.

பின்வரும் இலக்கங்கள் ஊடாக தகவல் அதிகாரிகளை தொடர்பு கொள்ளலாம்.

சிசிர ஹேனாதீர – ஜனாதிபதியின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் (சட்டம்)

கைபேசி இலக்கம் – 0718132590

அலுவலக இலக்கம் – 0112354329/ 0112354354

கலாநிதி சுலக்சன ஜயவர்தன – ஜனாதிபதியின் மேலதிக செயலாளர்

கைபேசி இலக்கம் – 0719994133/ 0711992354

அலுவலக இலக்கம் – 0112354329/ 0112354354

மின்னஞ்சல் முகவரி – addlsec.fsdpresidentsoffice.lk

விளம்பரத் தொடர்புகளுக்கு -
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் -
076 443 8622















காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## என்ன செய்வார் ரணில்?

இன்றைய ஜனநாயக அரசியல் சூழ்நிலையில் சாத்தியமானது எதுவோ, யதார்த்தமானது எதுவோ, அதையே நாம் முன்னெடுக்க வேண்டும்.

கனவுலகில் சஞ்சரித்தபடி, கற்பனையில் மிதந்தவாறு, நமக்கு விரும்பிய இலட்சியங்களைப் பற்றி எல்லாம் அதிகம் பிரலாபித்துக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. அவை நிஜ உலகில் எட்டப்படக் கூடியவையா என்று சிந்தித்துக் காரியமாற்ற வேண்டும்.

அந்த வகையில் இன்றைய அரசியல் சூழ்நிலையில், மக்களின் உடனடி, அத்தியாவசியப் பிரச்சினைகளுக்கு நீண்ட காலமாக இழுபடும் போராட்டங்களை நம்பி இருப்பதை விடுத்து, அவற்றுக்கு இடைக்காலத் தீர்வுகளை எட்டவும் முயல வேண்டும். அதுவே நடைமுறைச் சாத்தியமான அணுகுமுறையாகவும் இருக்கும்.

அதையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ரெலோ முன்னெடுத்திருக்கிறது. இது சந்தர்ப்பத்திற்கு ஏற்ற பொருத்தமான நகர்வுதான்.

சரியோ, பிழையோ இன்று நிறைவேற்றதிகாரத்தில் இருப்பவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கதான்.

அழுதும் அவளே பிள்ளை பெற்றாக வேண்டும் என்ற தத்துவத்துக்கு ஒப்ப இன்று தென்னிலங்கைத் தலைமையில் இருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனும் அவரது அரசுடனும் பேசித்தான் தமிழர்களின் உடனடிப் பிரச்சினைகளுக்கு குறைந்தபட்சம் இடைக்காலத் தீர்வையேனும் நாம் எட்ட முடியும்.

தென்னிலங்கைத் தலைமைத்துவத்தை அழுத்தங்களுக்கு உட்படுத்தி, இணங்க வைக்கும் – அல்லது அதனுடன் பேரம் பேசும் – வலுவான நிலையில் தமிழர் தரப்பு இன்று இல்லை. அதற்கான வலிமையும் தமிழர்களுக்கு உடனடியாகக் கைக்குக் கிட்டுவது துர்லபமே.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஆடிக் கறக்கும் மாட்டை ஆடி கறப்பது போன்றும், பாடிக் கறக்கும் மாட்டைப் பாடிக் கறப்பது போன்றும் தமிழர்கள் காரியமாற்ற வேண்டும்.

'ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாக இருக்க வேண்டும்' என்பர். தென்னிலங்கையில் அரசியல் நிகழ்வுகள், போக்குகள் எத்தகைய விதத்தில் – எந்தத் திசையில் கட்டவிழ்ந்தாலும், அவற்றுக்கிடையே எங்களது உடனடிப் பிரச்சினைகளுக்கு அவசர, அவசிய தீர்வு காண்பதில் நாம் கண்ணாகத்தான் இருக்க வேண்டும்; கண்கொத்திப் பாம்பாகத்தான் செயல்பட வேண்டும்.

அவசர, உடனடிப் பிரச்சினைகளை விலாவாரியான விவரங்களோடு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கவனத்திற்குக் கொண்டு வந்து, தீர்வு காண எடுத்திருக்கும் முயற்சி காரிய சாத்தியமான நகர்வுதான்.

அரசியல் கைதிகள் விடுதலை, வலிந்து காணாமலாக்கப்பட்டோர் பிரச்சினை மற்றும் இராணுவ ஆக்கிரமிப்புகள், காணிய அபகரிப்பு போன்றவற்றைத் தடுத்து நிறுத்துதல், கல்முனை பிரதேச செயலக சர்ச்சை போன்றவை தொடர்பில் காரிய சாத்தியமான நடவடிக்கைகளுக்கு ரெலோக் குழு காய் நகர்த்தி இருக்கின்றது.

அளித்த வாக்குறுதியை ஜனாதிபதி ரணில் நிறைவேற்றுவாரா அல்லது வழமையான தென்னிலங்கை தலைவர்கள் போல இதில் பேரினவாத அரசியல் செய்து, தந்திரம் காட்டுவாரா என்பதற்கு காலம்தான் பதில் கூறும்.

ஆனால் ரெலோவின் இந்த முயற்சியும், அதைப் பற்றிய பகிரங்கத் தெளிவுபடுத்தலும் ஆரோக்கியமான விடயங்கள்.

ரணிலை ஜனாதிபதியாகத் தமிழர்கள் அளவீடு செய்ய இது நல்லதோர் சந்தர்ப்பம். பார்ப்போம், ரெலோ குழுவினருக்கு அளித்த வாக்குறுதிகளை அவர் நிறைவு செய்வாரா என்பதை. குறுகிய காலத்தில் ஒரு முடிவு கட்ட வாய்ப்பு ஏற்படும் என எதிர்பார்க்கலாம்.

## நிதியமைச்சராக பதவிவகித்த காலத்தில் எடுக்கப்பட்ட அனைத்து முடிவுகளுக்கும் பொறுப்பேற்க நான் தயார்!

### அலி சப்றி தெரிவிப்பு



நிதியமைச்சராக பதவி வகித்த காலத்தில் எடுக்கப்பட்ட அனைத்து முடிவுகளுக்கும் பொறுப்பேற்கதயாராக இருக்கிறேன் எனவெளிவிவகார அமைச்சர் அலி சப்றி தெரிவித்தார்.

மத்திய வங்கியின் நடவடிக்கைகள் தொடர்பாக நாடாளுமன்றத்தில் வெளியிடப்பட்ட கருத்துக்கள் தொடர்பாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்றி நாடாளுமன்றத்தில் விளக்கமளித்தார். இதன்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அமைச்சர் அலி சப்றி –

மத்திய வங்கியின் ஆலோசனையின் பேரில் நாட்டின் கடன் கொடுப்பனவுகள் இடைநிறுத்தப்படும் என்ற அறிவிப்பு நாடாளுமன்றத்துக்குத் தெரிவிக்கப்படவில்லை என்றோ அல்லது அந்த நடவடிக்கைகளின் மூலம் ஏதேனும் பாதகம் ஏற்பட்டதாகவோ இந்தச் சபையில் யாராவது நினைத்தால், அந்த முடிவுகளுக்கான ஒட்டுமொத்த பொறுப்பையும் நான் ஏற்றுக்கொள்கிறேன்.

மத்திய வங்கியின் ஆளுநரை வெளியேற்ற யாரேனும் விரும்பினால், அதற்குப் பதிலாக நான் செல்லத் தயார்.

அவரது முடிவுகளால் இன்று மக்கள் பயனடைகின்றனர். இதுபோன்ற துணிச்சலான முடிவுகளை எடுக்கக் கூடியவர்களை வைத்துக்கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றிய எதிர்க்கட்சியின் பிரதான அமைப்பாளர் லக்ஷ்மன் கிரியெல்ல, நாடு உத்தியோகபூர்வமாக கடனை செலுத்தத் தவறி திவாலானதாக சர்வதேச சமூகத்துக்கு அறிவிக்கும் முன்னர் நாடாளுமன்றத்துக்கு அறிவிக்கப்படவில்லை என கேள்வி எழுப்பினார் என்பது குறிப்பிடத்தக்கது.

## நெருக்கடியிலிருந்து மீள மக்கள் ஆணை அவசியம்

### அநுர வலியுறுத்து

அரசாங்கம், தனியார் துறையினர், விவசாயிகள், வெளிநாடுகளில் உள்ள மக்கள் என அனைவரும் ஒன்றாக இணைந்து கைகோர்த்தால், இரண்டு மூன்று ஆண்டுகளில் நெருக்கடியில் இருந்து மீள முடியும் என தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இடைக்கால வரவு –செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

நாட்டின் அனைத்து மக்களையும் இவ்வாறு ஒன்றிணைக்க வேண்டுமாயின் மக்கள் ஆணையில் புதிய அரசாங்கம் ஒன்றை அமைக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அப்படி நடந்தால், நாட்டின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அந்த அரசாங்கத்துக்கு சுமார் இரண்டு ஆண்டு காலத்தை வழங்கலாம் எனவும் அவர் கூறியுள்ளார்.

நாட்டின் தற்போதைய ஜனாதிபதியை மக்கள் தெரிவு செய்யவில்லை எனவும் தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அத்துடன் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக கிடைத்த மக்கள் ஆணையின் மூலம் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தை



அமைப்பது மக்களின் ஆணைக்கு முரணானது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மக்களால் தெரிவு செய்யப்பட்டவரே நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்த முடியும்.

அரசாங்கத்தின் இடைக்கால வரவு – செலவுத் திட்டம் மக்களின் ஆணைக்கு எதிரானது எனவும் தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு மக்கள் ஆணை அவசியம்.

தற்போது மக்கள் ஆணையில்லாத மிதக்கும் மனிதர்கள் சிலர் வந்து நாட்டை ஆட்சி செய்கின்றனர் எனவும் அநுரகுமார திஸாநாயக்க கூறியுள்ளார்.

## சுதந்திரக் கட்சியின் யாப்புத் திருத்தத்துக்கு கட்சியின் அகில இலங்கை குழு அனுமதி

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாப்புத் திருத்தத்தற்கான முன்மொழிவுகளுக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அகில இலங்கைக் குழு அங்கீகாரம் வழங்கியுள்ளது.

மஹரகம – இளைஞர் சேவை மன்ற வளாகத்தில் நடைபெற்ற கட்சியின் 71ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடைபெற்ற அகில இலங்கை குழுக் கூட்டத்திலேயே இதற்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது.

கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர இது தொடர்பான யோசனைகளை அகில இலங்கை குழுவிடம் முன்வைத்ததுடன், கட்சியின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இது தொடர்பான வாக்கெடுப்பை நடத்தினார்.

அகில இலங்கை குழு உறுப்பினர்களுக்கு கைகளை உயர்த்தி ஆதரவை தெரிவிக்குமாறு தலைவர் தெரிவித்ததுடன், பெரும்பான்மையான உறுப்பினர்கள் கைகளை உயர்த்தி ஆதரவு வழங்கினர்.



இதனையடுத்து, தமது அதிருப்தியை வெளிப்படுத்திய அகில இலங்கைக் குழு உறுப்பினர்களை கைகளை உயர்த்துமாறு கட்சியின் தலைவர் தெரிவித்த போதிலும், அவர்கள் எவரும் அப்போது தமது அதிருப்தியை வெளிப்படுத்த கைகளை உயர்த்தவில்லை.

இதன்படி, கட்சியின் யாப்புத் திருத்தங்கள் தொடர்பான யோசனைகள் அகில இலங்கைக் குழுவில் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டதாக கட்சியின் தலைவர் அறிவித்தார்.


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# பயங்கரவாத விசாரணைப் பிரிவினரின் அழுத்தத்தாலேயே குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தைப் பலர் வழங்கினார்கள்!

## தடைப் பட்டியலில் இருந்து அப்பாவிகளை நீக்குங்கள் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் சபையில் ஆதங்கம்



'தடைப் பட்டியலில் உள்ளவர்களைப் பயங்கரவாத விசாரணைப் பிரிவினர், அழுத்தம் கொடுத்து, குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்துள்ளனர். மனித உரிமை ஆணைக்குழுவிற்கு வழங்கியுள்ள அறிக்கையில் குற்ற ஒப்புதல் தருமாறு தாம் கேட்டதாக உரிய அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளமையும் அதனை உறுதிப்படுத்துகிறது. அவ்வாறான அப்பாவிகளை தடைப்பட்டியலில் இருந்து நீக்குங்கள்'

– இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், நாடாளுமன்றத்தில் இரண்டாம் நாள் இடம்பெற்ற இடைக்கால வரவு – செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார்.

பயங்கரவாதத் தடைச்சட்டம் தொடர்பான தீர்மானங்களை ஜனாதிபதி மீளாய்வுக்கு உட்படுத்த வேண்டும். அதே போன்று, தடைப்பட்டியலில் அதிகமான அப்பாவி மாணவர்கள் உள்ளடக்கப்பட்டிருக்கின்றனர். அதனை அரசாங்கம் மீள் பரிசீலனை செய்யவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்

தொடர்ந்து உரையாற்றுகையில் தலைவர் ஹக்கீம் கூறியவை வருமாறு –

வரவு – செலவுத் திட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆற்றிய உரை பற்றி ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிடும்போது, முழுமையான பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான அத்திபாரமாக இருப்பதற்கு இதனூடாக முயற்சித்திருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில், 2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் அவர் விரிவாக விளக்கமளிப்பார் என எதிர்பார்க்கலாம்.

அவர் பிரதமராகப் பொறுப்பேற்றவுடன் கூறிய ஒரு வாசகம் கவனத்தை ஈர்த்தது. அப்பொழுது அவர் 'நான் ஓர் இரவு நேரக் காவலாளி' என்றார். அதாவது கிரிக்கெட் விளையாட்டைப் பொறுத்தவரை அந்திசாயும் வேளையில் மங்கலான வெளிச்சத்தில் அடுத்த நாள் ஆட்டத்தைத் தொடரும்வரை தக்க வைத்துக் கொள்வதற்கு அணியில் பலவீனமான ஒருவரை ஆடு களத்தில் இறக்குவது வழக்கம். அவ்வாறு நிறுத்தப்படுபவர் சிலவேளைகளில் நூறு ஓட்டங்களைக் கூட எடுத்த வரலாறும் உண்டு. லலித் கலுப்பெரும என்ற சுழல்பந்து வீச்சாளர் அவ்வாறானதொரு சாதனையை நிலைநாட்டியவர்களில் ஒருவராகக் காணப்படுகின்றார்.அவ்வாறுதான் ஜனாதிபதியாக இருக்கும் இவரும் 'இரவு காவலாளி' கோலத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட ஓட்டங்களைக் குவிக்க எத்தனிப்பதான தோற்றப்பாட்டை காண்பிக்க முயற்சித்து வருகின்றார்.

அதே போன்று இப்பொழுது வணிக மயப்படுத்தப்பட்டுள்ள கிரிக்கெட் விளையாட்டில் ரி – 20யில் ஐ.பி.எல். போன்று ஒரு வகையான வணிகம் தலைதூக்குவதாகக் கருதப்படுகின்றது. அவ்வாறுதான் இந்த ஜனாதிபதியும் ராஜபக்ஷ குடும்பத்தைக் காப்பாற்றுவதற்காக ஆடுகளத்தில் குதித்த கப்டனாகத் தென்படுகிறார். அதன்படி அவர் ராஜபக்ஷ குடும்பத்தின் இரட்சிப்பாளராகத் தொடர்ந்தும் இருக்க விரும்புகிறாரா அல்லது யதார்த்தமான விதத்தில் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு முயற்சிக்கப் போகின்றாரா என்பதில் ஏதாவதொன்றை அவர் நிரூபிக்க வேண்டும்.

பயங்கரவாதத் தடைச் சட்டம் 1978 ஆம் ஆண்டில் ஒரு தற்காலிகமான சட்டமாகவே அறிமுகப்படுத்தப்பட்டது. காலாகாலமாக யாராவது ஒருவர் ஏதாவதொரு காரியத்துக்குக் குற்றஞ்சாட்டப்பட்டால் அத்தகையோருக்கு உரிய காப்பீடாக அமையும் பல்வேறு சட்டங்கள் நடைமுறையிலிருக்கத்தக்கனவாக, அவற்றுக்கு முற்றிலும் மாற்றமாக, ஏனைய சட்டங்களை ஓரங்கட்டிப் புறந்தள்ளிவிட்டு, பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பாவித்து தொடர்ந்தும் அப்பாவி மாணவர்களையும், நிரபராதிகளையும் கைது செய்து தண்டித்து வருகின்றனர்.

பயங்கரவாத தடைச்சட்டத்தை முறைகேடாகப் பயன்படுத்தி தொடர்ச்சியாக ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இது ஜனாதிபதி எதிர்பார்க்கும் நாட்டின் சட்டத்தையும் ஒழுங்கையும் ஏற்படுத்தும் நடவடிக்கைகளுக்குப் பாரிய சவாலாக அமையும். இதனை அவர் புரிந்துகொள்ள வேண்டும். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவோரை விரட்டி விரட்டித் தாக்குதல் நடத்தியும் அவர்களைக் கைதுசெய்து தடுத்து வைத்திருக்கும் தீர்மானத்துக்கு கையெழுத்திடுவதும் சவாலுக்குரியவை.

'நீங்கள் சர்வதேசத்துக்கு வழங்கும் செய்தி இதுவா?' என்று கேட்க விரும்புகின்றேன். ஜனாதிபதி தனது இந்தப் போக்கை மாற்றியமைத்து இந்த விடயத்தை மீளாய்வு செய்து வரவு – செலவுத் திட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்ற உரிய நடவடிக்கை எடுப்பார் என நினைக்கின்றேன்.

இதேவேளை, சில நபர்கள் தடைப்பட்டியலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் ஜனாதிபதி செயலகம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினரொருவரின் கேள்வியொன்றுக்குப் பதிலாகவும் அது அமைந்துள்ளது. அதில் 2012 ஆம் ஆண்டின் முதலாம் இலக்க ஐ.நா. அறிக்கைக்கு அமைவாக, சாட்சியங்கள் மற்றும் விசாரணைகளின் அடிப்படையில் 216 நபர்களும்,6 அமைப்புக்களும் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டன என உள்ளது.

ஆனால்பட்டியலில்உள்ள156முஸ்லிம்களினதும்,6 முஸ்லிம்அமைப்புகளினதும்நிலைஎன்ன?சஹ்ரானின் 4 அமைப்புகளைப்பற்றி நான் கூற வரவில்லை. அந்த பட்டியலில் இடம்பெற்ற அப்பாவி முஸ்லிம் நபர்கள் மற்றும் மாணவர்கள் விடயத்தில் அதே நடைமுறை கையாளப்பட்டதா? அவ்வாறான நடவடிக்கைகள் சாட்சியங்கள் மற்றும் விசாரணைகள் இடம்பெற்றனவா? நீதி அமைச்சு, வெளிவிவகார அமைச்சு மற்றும் பாதுகாப்பு அமைச்சு இதுதொடர்பாக மீள் பரிசீலனை செய்யவேண்டும். அத்துடன் இந்தத் தடைப்பட்டியலில் உள்ளவர்களைப் பயங்கரவாத விசாரணைப் பிரிவினர், வற்புறுத்தி அழுத்தம் கொடுத்து, குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்துள்ளனர். மனிதஉரிமை ஆணைக்குழுவிற்கு வழங்கியுள்ள அறிக்கையிலும் குற்ற ஒப்புதல் தருமாறு தாம் கேட்டுக்கொண்டதையும் உரிய அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளமை அதனை மேலும் உறுதிப்படுத்துகிறது. அதனால் அப்பாவிகளை பிரஸ்தாபத் தடைப்பட்டியலில் இருந்து நீக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

இது தொடர்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.எம்.சுஹைர் எழுதியதையும் ஹன்சார்டில் இடம் பெறச் செய்வதற்காக சபையில் சமர்ப்பிக்கிறேன்.

அத்துடன், உத்தேசமின்சாரக் கட்டண அதிகரிப்பு காரணமாக சமயத் தலங்களில் 180 அலகுகளுக்கு மேல் பாவித்தால் தற்போதுள்ள கட்டணத்தைவிட ஏறத்தாழ 700 வீதம் அதிகரிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, அதுதொடர்பில் அரசாங்கம் உரிய கவனம் செலுத்தி நிவாரணம் வழங்க வேண்டும். – என்றார்.








**குட்டிக் கதை ஒன்று படித்துப் பாருங்கள்**

# தன்னைப் போல்தான் வாழ்வார் உலகிலுள்ளோர்களும்



தினசரி அதிகாலையில் கிருஷ்ணதேவராயருக்கு முகம் மழிப்பதற்கு சவரத் தொழிலாளி ஒருவன் அரண்மணைக்கு வருவது வழக்கம். தினசரி காலையில் முகத்தை மழித்து முடியைத் திருத்துபவராதலால் அந்தத் தொழிலாளியிடம் வேடிக்கையாக எதையாவது பேசுவது கிருஷ்ணதேவராயரின் வழக்கம். அவனும் மன்னர் கேட்கும் கேள்விகளுக்கு இணக்கமாகப் பதிலுரைப்பான்.

ஒருநாள் அவன் கிருஷ்ணதேவராயருக்கு முகம் மழித்துக் கொண்டிருக்கும் போது,நீ நாட்டு மக்களிடம் சகஜமாகப் பழகுபவனாயிற்றே. நமது நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரம் எந்த நிலையில் இருக்கிறது என்று உனக்குத் தெரிந்திருக்குமே என்றார்.

மேன்மை தாங்கிய மகாராஜா அவர்களே! தங்களுடைய ஆட்சியில் மக்கள் நன்கு சுபீட்சமாக இருக்கின்றனர். மக்களின் ஒவ்வொருவர் இல்லத்திலும் குறைந்தபட்சம் எலுமிச்சம் பழம் அளவிற்குத் தங்கம் இருக்கிறது. அதனால் எவரும் கவலையில்லாமல் இருக்கின்றனர் என்றார் சவரத்தொழிலாளி. சவரத் தொழிலாளி சென்ற பின்னர் எப்போதும் போன்று மன்னரைக் காண அப்பாஜி வந்தார்.

அப்பாஜியிடம் சவரத் தொழிலாளி கூறியதை மன்னர் கூறினார். இவன் இப்படிக் கூற என்ன காரணம்? இவன் சொன்னது போன்று எப்படி எல்லோரிடமும் எலுமிச்சம்பழ அளவில் பொன் இருக்கும்? எலுமிச்சம்பழ அளவு பொன் என்பது சாதாரண மக்கள் வைத்திருக்க முடியாது! பெரும் பணக்காரர்களிடத்தில் அல்லவா இருக்கும். ஆகையினால் இது பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும்! என்று வினவினார்.

இதற்கு விரைவில் விடையைக் கூறுகிறேன் என்று அப்பாஜி மன்னரிடம் கூறிவிட்டுச் சென்றுவிட்டார். மறு நாள் வழக்கம்போல் சவரத் தொழிலாளி அரண்மனைக்கு வந்து கிருஷ்ணதேவராயருக்கு முகம் மழித்துக் கொண்டிருந்தான்.

அச்சமயம் அப்பாஜி, காவலர்களை அழைத்து சவரத் தொழிலாளியின் இல்லத்தை சோதனை செய்துவிட்டு விரைவில் வாருங்கள் என்று கட்டளையிட்டார்.

காவலர்கள் சவரத் தொழிலாளியின் இல்லத்திற்குச் சென்று சோதனை செய்தபோது, அடப்பப் பெட்டியில் எலுமிச்சம்பழ அளவுக்கு பொன் இருப்பதைக் கண்டு வந்து கூறினர். அதனை மன்னரிடம் கொடுத்துவிட்டு, மன்னர் பெருமானே! அடுத்த நாள் சவரத் தொழிலாளி வந்ததும், முதலில் கேட்டது போன்று கேளுங்கள். அவனிடமிருந்து வேறு விதமான பதில் கிடைக்கும் என்றார் அப்பாஜி.

வழக்கம் போல் காலை கிருஷ்ணதேவராயருக்கு முகம் மழிக்க சவரத் தொழிலாளி வந்தமர்ந்தான். வரும் போதே அவனது முகம் வாடியிருந்தது. அவன் தனது வேலையை ஆரம்பிக்கும் சமயம், இப்பொழுது குடிமக்கள் எவ்வாறு இருக்கிறார்கள்? ஏதாவது மாறுதல் உண்டாகியிருக்கிறதா? என்று வினவினார் மன்னர்.

பெருமதிப்பிற்குரிய மகாராஜா அவர்களே! அதை ஏன் கேட்கின்றீர்கள்? எல்லோரும் மனக்கலக்கத்துடன் இருக்கின்றனர். கையில் இருக்கும் எலுமிச்சம் பழ அளவு தங்கத்தை இழந்துவிட்டால் மக்கள் எப்படி மகிழ்ச்சியுடன் வாழ முடியும்? என்று சவரத் தொழிலாளி கண்களில் நீர் மல்க தொண்டை அடைக்கக் கூறினான்.

அச்சமயம் வந்த அப்பாஜி, மன்னர் பெருமானே! இப்போது விடை தெரிந்து விட்டதா? உலகத்திலுள்ள ஒவ்வொருவரும் தன்னுடைய மன இயல்புக்கு ஏற்பதான் மற்றவர்களின் நிலையை நிர்ணயிக்கின்றனர். தன்னைப் போல்தான் பிறரும் இருப்பார்கள் என்று நினைக்கின்றனர்.

தான் நல்ல வருமானத்துடன் வாழ்ந்தால் மற்றவர்களும் அப்படித்தான் வாழ்வார்கள் என்றும், தான் கஷ்டநிலையில் வாழ்ந்தால் மற்றவர்களும் கஷ்டத்துடன் தான் வாழ்கிறார்கள் என்று மனப்பக்குவத்தில் வாழ்கின்றனர் என்றார் அப்பாஜி. உடனே காவலனை அழைத்து, கஜானாவில் பாதுகாப்புடன் இருக்கும் எலுமிச்சம்பழ அளவு பொன்னைக் கொண்டு வந்து சவரத் தொழிலாளியிடம் கொடுங்கள் என்று ஆணையிட்டார் மன்னர்.

கொண்டு கொடுத்த பொன்னுடன் சிறிது பொன்னும் பரிசாகச் சவரத் தொழிலாளிக்குக் கொடுத்தார். அவனும் மனம் மகிழ்ந்து பணிவுடன் வணங்கி இன்முகத்துடன் வாங்கிச் சென்றான். மனித இயல்பை விளக்கிக் காட்டிய அப்பாஜியின் அறிவுத் திறமையைப் பாராட்டினார் கிருஷ்ணதேவராயர்.

# சிறுவர் உரிமைகளை பாதுகாப்போம்



பிறக்கின்ற குழந்தைகள் அனைத்தும் பூமியில் நல்லவர்களாக தான் பிறக்கின்றார்கள் அவர்கள் வளருகையில் அவன் சார்ந்துள்ள குடும்பம், சமூகம் தான் அவனது வளர்ச்சியை தீர்மானிக்கின்றன.

சிறுவயது என்பது கள்ளம் கபடமற்றது அந்தபராயத்தில் குழந்தைகளுக்கு கிடைக்க வேண்டிய உரிமைகளை பாதுகாக்க வேண்டியது அவசியமாகும். சிறுவர்கள் எனப்படுபவர்கள் 18 வயதுக்கு குறைந்தவர்கள் ஆவர். 1989 களில் சிறுவர் உரிமைகள் ஐக்கிய நாடுகள் சபையினால் நடைமுறைப் படுத்தப்பட்டன.

அவற்றுள் வாழ்வதற்கான உரிமை, வளர்ச்சிக்கான உரிமை, பாதுகாப்பு உரிமை, பங்கேற்பதற்கான உரிமை, கல்விக்கான உரிமை என பொதுவான உரிமைகள் காணப்படுகின்றன.

எந்தவொரு செயலுடையதும் ஆரம்பம் என்பது சிறப்பாக இருக்கவேண்டும். என்பது தான் எம்முடைய எதிர்பார்ப்பு. விளையும் பயிரை முளையிலே தெரியும் என்பது முதுமொழி.

அது போல ஒரு மனிதனுடைய எதிர்காலம் அவனது பழக்கவழக்கங்கள் சிறுபராயம் என்ற ஒன்றில் இருந்து ஆரம்பிக்கின்றது. சிறுவயதில் ஆரோக்கியமாகவும் அன்பான மற்றும் நேர் எண்ணங்கள் கொண்ட ஒரு சூழலில் வாழ்கின்ற போது தான் எதிர்காலமும் வளமானதாக அமையும்.

இவற்றின் அடிப்படையில் சிறுவர்கள் பாதுகாக்கப்பட வேண்டும். இவற்றினை பின்பற்றி அரச சட்டங்கள் அமையவேண்டும். சிறுவர் துஷ்பிரயோகங்களில் ஈடுபடுபவர்கள் சட்டத்தின் முன் தண்டிக்கப்படவும் வேண்டும்.

சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல்,போதைக்கு அடிமையாக்கல், பாலியல் துஷ்பிரயோகங்கள் போன்றவற்றில் ஈடுபடுபவது தண்டனைக்குரிய குற்றமாகும்.

# நாய்க் குட்டி



தோ தோ நாய்க் குட்டி
துள்ளி வா நாய்க் குட்டி
வெள்ளை நிற நாய்க் குட்டி
வீரமான நாய்க் குட்டி

எலியைப் பிடிக்க ஓடும்
புலியைப் போலப் பாயும்
திருடன் வந்தால் குரைக்கும்
லொள் லொள் லொள்

வாலை வாலை ஆட்டும்
பாலைப் பாலைக் குடிக்கும்
நன்றியுள்ள நாய்க் குட்டி
நான் வளர்க்கும் நாய்க் குட்டி

# RADIANT DAWN

A Sunday Supplement in English to Kalaikkathir

Page I English for all Sunday the 04th of Septmber 2022

We welcome students' articles in word for publication

-Editor-

kalaikkathiredu@gmail.com

# Kia Ora! Welcome to New Zealand



Imagine a place where you can swim, take a boat or ferry ride, and visit a park—all in the same city! You don't have to imagine it—it's Auckland, New Zealand! Auckland is located on New Zealand's North Island. It is the biggest city in New Zealand. Auckland is sometimes called "The City of Sails." That is because it is famous for sailing and yacht races. Auckland is also home to Sky Tower. Sky Tower is the tallest building in the Southern Hemisphere.

You can go to the top of Sky Tower and see for miles around. You can also go on a dolphin and whale-watching tour. Auckland has a zoo and many bike paths. There are many stores and restaurants. No matter what you like to do, you can find something fun to do in Auckland.

**1. What would be a good title for this text?**
A. All About Auckland
B. Let's Visit Sky Tower!
C. The Story of New Zealand
D. The Best Bike Trails

**2. Why is Auckland sometimes called "The City of Sail**
A. It is located on the North Island.
B. It is the largest city in New Zealand.
C. It is famous for sailing and yacht racing.
D. You can go dolphin and whale watching.

**3. Which part of speech is the word imagine?**
A. an adjective B. a noun
C. a verb D. a pronoun

**4. What is a yacht?**
A. food B. a boat
C. an animal D. a shoe

**5. Which word describes the tone of this text?**
A. informative B. serious
C. funny D. depressing

There is a sport that is played in over 100 countries. Can you guess what it is? It is played with fifteen players on each team. The object of the game is to carry the ball over the opponents' goal line. Have you guessed the sport yet? It's rugby! Rugby is extremely popular in many countries of the world. It is the national sport of New Zealand, South Africa, Wales, and other countries. Rugby is like American football in some ways, but many rules are different. For example, in both rugby and American football, the ball has an oval shape.

Players try to carry it down the field. But there are different rules in each sport for how the ball can move. Rugby is getting more popular. In fact, it is so popular that it will be included in the 2016 Olympics!

**1. Which of these is a topic sentence?**
A. It is the national sport of New Zealand, South Africa, Wales and other countries.
B. Rugby is extremely popular in many countries of the world.
C. There is a sport that is played in over 100 countries.
D. It is played with fifteen players on each team.


**2. Which statement is not true about rugby?**
A. There are fifteen players on a team.
B. It is the national sport of several countries.
C. It will be included in the 2016 Olympics.
D. It is exactly like American football.

**3. Which of these is a prepositional phrase?**
A. in over 100 countries
B. there is a sport
C. sport that is played
D. that is played

**4. What are opponents?**
A. players on the other team
B. players on the same team
C. popular in many countries
D. the national sport of New Zealand

**5. Which word does not reflect how the author describes rugby?**
A. popular B. varied
C. widespread D. dangerous

## *The Lion and The Mouse*




When a lion was resting in the jungle, a mouse began racing up and down his body for amusement. The lion's sleep was interrupted, and he awoke enraged. The lion was going to eat the mouse when the mouse begged him to let him go. "I assure you, if you save me, I will be of immense help to you in the future." The lion laughed at the mouse's self-assurance and freed him.

A group of hunters arrived in the forest one day and captured the lion. They had him tied to a tree. The lion began to roar as he struggled to get out. Soon, the mouse passed by and spotted the lion in distress. He dashed off, biting on the ropes to free the lion, and the two hurried off into the woods.

***Moral of the story: Always be kind to one another.***

**Great spirits have always encountered violent opposition from mediocre minds - Albert Einstein**

# Welcome to New Zealand



Kia Ora (kee OR-uh) means "hello" in Maori (MAH-aw-ree). Maori is one language spoken in New Zealand. English is the other language spoken there. New Zealand is an island country in the Pacific Ocean. It is in the Southern Hemisphere. The seasons there may be different from the seasons you know. When it is winter in the United States, it is summer in New Zealand.

New Zealand is mostly made of two large islands: North Island and South Island. Together, they are about the size of Colorado. The capital of New Zealand is Wellington. Wellington is on North Island. So is Auckland, the country's largest city. But most of New Zealand is not made up of very large cities. Instead, there are many smaller cities and towns.

New Zealand is not a big country, but there is a lot to see and do. On South Island, there are beautiful mountains where you can ski. There are miles of beaches and many forests and lakes. On North Island, you can see volcanoes and hot springs. You can visit New Zealand's two largest cities, too. North Island is a little warmer than South Island.

There are many animals in New Zealand, too. There are many kinds of fish, whales, and dolphins in the water. There are also many kinds of birds. The most famous bird is the kiwi. It is a flightless bird about the size of a chicken. The kiwi is related to the ostrich and the emu, but it is much smaller. The kiwi is a very famous part of New Zealand life. In fact, New Zealanders are sometimes called Kiwis.

Children in New Zealand go to school just like you do and play sports just like you do. The most popular sport is rugby; in fact, rugby is the national sport of New Zealand. But other sports are popular, too, such as sailing and cricket. Cricket is a game a little like baseball. Maybe if you visit New Zealand, you will get to go to a rugby game or a cricket match.

**1. What are New Zealanders called?**
A. Islanders
B. Crickets
C. Kiwis
D. Kia Ora

**2. Which statement is true about New Zealand?**
A. Its national sport is baseball.
B. The largest cities are on South Island.
C. It is a small country made up of two islands.
D. It is larger than the United States.

**3. What is the author's purpose?**
A. to tell about New Zealand
B. to tell a personal story
C. to tell about kiwis
D. to get you to go skiing

**4. Why is there so much sea life around New Zealand?**
A. The climate is very cold.
B. It is an island country.
C. It is a very large country.
D. There are mountains in New Zealand.

**5. How is the information about New Zealand organized in this text?**
A. It compares the hemispheres.
B. It describes the nation's history.
C. It shares facts about New Zealand.
D. It explains how to speak Maori.

**6. Why is sailing so popular in New Zealand?**
A. New Zealand is an island country, so there is a lot of water.
B. New Zealand is a very large country.
C. Sailing is a very easy thing to do.
D. Sailing is one of the oldest sports.

**7. Which fact does not support the main idea?**
A. New Zealand is in the Southern Hemisphere.
B. Cricket is a game a little like baseball.
C. New Zealand has two islands.
D. There are many interesting animals in New Zealand.

**8. Which summarizes this text?**
A. New Zealand is in the Southern Hemisphere.
B. New Zealand is a small country with a lot to offer residents and visitors.
C. Life in New Zealand is pretty easy.
D. Rugby is the national sport.

# *Ruler pays tribute to Jaffna Tamils*



'Their contributions are an integral component of multicultural Malaysia'

KUALA LUMPUR: The Jaffna Tamil community has played an important role in every facet of Malaysian society, said the Sultan of Perak, Sultan Nazrin Muizzuddin Shah.

Known for their rich culture and heri- tage, the Ruler said the Jaffna Tamils had continued to produce influential and impactful professionals in fields from medicine, education and engineering to politics, civil service and the law.

Sultan Nazrin said they also continued to engage with culture and heritage relat- ed to music, dance, movies and the culi- nary arts.

"These contributions are an integral component of the multicultural nature of Malaysia that we all cherish," the Ruler said at the launch of the book titled They Came From Jaffna: A Historical Culinary Journey and Enchanting Tale of Roots, Routes and Vivid Memoires, As Told By A Pioneer's Granddaughter authored by Indra R. L. Iswaran at Universiti Malaya here yesterday.

Sultan Nazrin said the Jaffna Tamils contributed in multiple and significant

ways to the development of Singapore and Malaysia since their migration in the late 19th century, Bernama reported.

"Travelling by rail back in the old days, one would have encountered many Ceylon (Jaffna) Tamil stationmasters. Many of the chief clerks in government offices and business agencies also came from this community," he said.

On the book itself, the Ruler said it encapsulated both the cultural authenticity of one particular community as well as the fusion of this specific culinary heritage with other local and international influences.


"This unique book manages to engage all the senses: from the intellectual reward of the historical details it contains, to the aesthetic pleasure gained from the beautiful illustrations and photos, to the remembered and imagined smells and tastes that are conjured up by all the detailed recipes.

"For me as a historian, this interweaving of images, voices and tastes from the past provides a very special window into those long ago times," said Sultan Nazrin.

Yes. As Told By A

detailed recipes. historian, this interw

# The Cultural Significance of Maori Tattooing










The Cultural Significance of Maori Tattooing Introduction Tattooing in the Maori culture does not only serve an aesthetic purpose but also represent strong cultural links (Ellis, 2004).

A cultural significance of Maori tattooing is as a source and expression of individual identity as a member of the community.Maori TattooingThe origin of Maori tattooing is divine folklore. The story starts with a mortal man marrying the daughter of the ruler of the underworld. The daughter left her world to live with the mortal man. One day, the man beat his wife.

Due to this wrongdoing, his wife returned to her father's world. After realizing his mistake, the man wanted to win back his wife. He traveled to the underworld in search of his wife. Due to his remorse, the gods awarded him the art of tattooing, which he brought back to the world.

(Palmer & Tano, 2004) Tattooing represented a commitment to not doing any wrongdoing and man's divine connection with the spiritual world. Tattooing for the Maori is a gift from the divine and a sign of goodness. Individuals receiving tattoos gain a divine favor by taking part in this gift from the gods. Maori tattoos are unique. It is different from person to person because the design of the markings depends on individual circumstances (Palmer & Tano, 2004). Every curve and line represents an aspect of a person's life (Kuwahara, 2005), which differs even with common experiences. The Maori people with tattoos display their marks with pride as a badge of their character as individuals.Personal Identity in Maori Tattooing Maori tattooing expresses individual identity as a member of the community and overall cultural identity of the Maori people as an artifact of cultural beliefs, practices and values that distinguish the Maori from other people (Ellis, 2004).

It represents both individual property and cultural identity (Pritchard, 2000). As an individual property, tattoos comprise an extension of the individual's self. It also serves as the connection of an individual to the community and its way of life. As a source of cultural identity, members of the community share Maori tattooing as part of common belief and experience. Tattooing serves as a bridge between individual property and community or cultural identity. Tattoos are not solely individual exclusive property but it is also not an exclusively common property because the markings are unique to an individual (Pritchard, 2001). Tattoos also represent cultural boundaries by defining beliefs, values and practices of a particular culture (Kuwahara, 2005) such as the Maori way of life (Ellis, 2004).

Maori tattoos express a person's identity since the tattoos are unique to an individual and the design portrays different aspects of the life of its bearer encompassing social, economic and political aspects (Kuwahara, 2005). A person's tattoos relate lineage and family background (Palmer & Tano, 2004). There are certain markings distinctly common among family members. This is a mark of lineage even if the overall design of the tattoo marks is unique to every family member. The Maori tattoos are also a source of tribal affiliation (Palmer & Tano, 2004). While similar principles apply in Maori tattooing, there are distinct markings identifying the different tribes. This serves as an individual identification among the different tribes.

Each tribe can recognize its own member through the tattoos. The tattoos also represent passage through life's stages determined by Maori cultural beliefs. Puberty is one important stage that could be a reason for getting a tattoo. The tattoo in reaching the stage of puberty represents the achievement of manhood or womanhood. Other achievements such as victory in war or taking over a leadership position in the community are also stages that constitute reasons for obtaining tattoos.

(Palmer & Tano, 2004) Maori tattooing reflects individual economic standing in the community (Kuwahara, 2005). The tattoos reflect work so that there are distinctive tattoos for warriors as well as for other work or trade. The presence or lack of tattoos also says something about once rank in a given trade. Tattooing is also costly so that only those with a high economic status can afford tattoos (Palmer & Tano, 2004). As such, the more tattoos a person has, this represents the extent of personal or family wealth.

**(See page 11)**










# The Cultural Significance of Maori Tattooing

(By indicating economic standing, tattoos also found use in trade. As a form of identification unique to individuals, the tattoos have a distinct pattern committed to memory by its owner and recognized by other people so that it became a means of trading property such as in signing land deeds in lieu of a signature (Palmer & Tano, 2004). Tattoos are also the basis of identity in political situations. The location and number of tattoos represents leadership status within the community and to other tribes. Tattoos especially on the face and marks covering the entire face represent a high position of authority and respect in the community for both men and women (Palmer & Tano, 2004). Members of the community take pride in their leader's tattoos and the leaders of other tribes recognize their counterparts during negotiation through the location and extensiveness of tattooing. Maori tattoos extend beyond an individual's life, which in effect keeps a person's identity intact even after death (Pritchard, 2000). When tattooed members of the community die strict rules governing the preservation of their tattooed heads apply.

The heads serve as tokens from the dead person and represent the person's position as a member of the family and tribe (Palmer & Tano, 2004). The preserved heads serve a purpose in time of war and in negotiating peace. During war, the victors collect the tattooed heads of leaders. They use the heads to show valor and return the heads to the families in accepting a peace offer.




















ConclusionTattooing is largely an individual feat and having a tattoo builds personal identity and reflects on an individual's personal characteristics. Tattoos are identification marks for the Maori people, which distinguish the spiritual, social, economic and political dimensions of personal character. This justifies the high value accorded to tattoos by Maori communities.

காலைக்கதிர் Kalaikkathir

# இயற்கை மருத்துவத்தின் சிறப்பம்சம்



அடிபட்ட காயங்கள், சுற்று சூழல் சம்பந்தமான நோய்கள் தவிர பிற நோய்களுக்கான காரணங்களும், வைத்திய முறைகளும் ஒன்றேயாகும். தேவையில்லாத கழிவுகள் உடலில் தங்குவதே நோய்க்கான காரணமாகும். கழிவுகளை நீக்கி நோயை குணப்படுத்துவது இயற்கை மருத்துவத்தின் சிறப்பம்சம்.

மனித உடலில் கழிவுகள் தங்குவதே நோய்க்கான மூலகாரணம் ஆகும். உடலில் கழிவுகள் தங்குவதால் கிருமிகள் உடலில் வாழ்வதற்கு ஏற்ற சூழல் உருவாகிறது.

தீவிரமான நோய்களனைத்தையும் உடலே தன்னிச்சையாக சரி செய்து கொள்ளும். இது உடலுக்கு சாதகமானது, பாதகமானதல்ல, தவறான சிகிச்சையாலும், நீண்டகால சிகிச்சையின்மையாலும் நோய்கள், நாள்பட்ட நோய்களாக மாறுகின்றன.

இயற்கையே ஒரு மிகச்சிறந்த மருத்துவராகும். நோய் வராமல் தடுக்கவும், வந்தால் குணப்படுத்தவும், இழந்த சக்தியை மீண்டும் பெறக்கூடிய ஆற்றலை இயற்கையிலேயே நமது உடல் பெற்றுள்ளது.

இயற்கை மருத்துவத்தில், சிகிச்சை என்பது நோயை சரி செய்தல் என்பது அல்ல. மாறாக நோயாளியை அத்தன்மையில் இருந்து விடுவித்து புதிய நிலைக்கு கொண்டு செல்வதாகும்.

இயற்கை மருத்துவம் நோயாளியின் நாள்பட்ட நோய்களை குணப்படுத்துகிறது.

வெளியே தெரியாத அழுத்தப்பட்ட நோய்கள் நிரந்தரமாக குணமாக்கப்படுகிறது.

இயற்கை மருத்துவமானது உடல், மனம், சமூகம், ஆன்மா என அனைத்தையும் ஒன்று சேர்த்த மருத்துவ முறையாகும்.

இயற்கை மருத்துவம் பாதிக்கப்பட்டுள்ள உறுப்புகளை மட்டும் பார்க்காமல் உடலின் அனைத்து பகுதிகளையும் சரி செய்கிறது.

இயற்கை மருத்துவத்தில் உணவுதான் மருந்தாகிறது. வேறு மருந்து தேவையில்லை.

இறை நம்பிக்கைக்கு ஏற்ற வகையில் வழிபாடு செய்து நோய் தீர்ப்பது மிக முக்கிய பங்காக உள்ளது.

## உணவுக்கட்டுப்பாடு சிகிச்சை

இயற்கைத் தன்மையுடன் பருவக்காலத்திற்கேற்ற செழுமையான பழங்கள், காய்கறிகள், கிழங்குகள், கொட்டைகள் ஆகியவை சிறந்த பலனைத்தரும். இந்த உணவு முறையினை மூன்று வகைகளாக பிரிக்கலாம். அவை:

திரவ உணவு: எலுமிச்சைபழச்சாறு, இளநீர், காய்கறிச்சாறு, கீரைச்சாறு, வெண்ணைய், கோதுமை புல்சாறு ஆகியவை திரவ உணவாகும்.

இனிமையான உணவு: பழங்கள், நீராவி மூலம் வேக வைத்த காய்கள், முளைகட்டிய தானியங்கள் பயிர்கள், காய், கீரைகளில் செய்த சட்னி, துவையல்கள்.

ஆக்கபூர்வமான உணவுப்பழக்கம்: தேய்த்து பளபளப்பாக்காத அரிசி, சிறு தானியங்கள், முழுமையான மாவு, முளை கட்டிய தானியம், கிழங்குகள் தயிர் போன்றவை ஆகும்.

கார வகை உணவுகள், உடல் நலத்தை உயர்த்தி, உடலை தூய்மையாக்கி நோய் எதிர்ப்பு சக்தியை அளிக்கிறது. இதனை பெறுவதற்கு சரியான சரி விகித உணவு தேவையாகும். உடல் நலனை பேணிட உணவு வகைகளில் 20% அமிலத்தன்மையும் 80% காரத்தன்மையும் இருத்தல் வேண்டும். சம நிலை உணவு உடல் நலத்திற்கு தேவையானதாகும். இயற்கை முறை வைத்தியத்தில் உணவே மருந்தாக உள்ளது.

## உண்ணாநிலை சிகிச்சைமுறை

உண்ணாநிலை என்பது குறிப்பிட்ட உணவு அல்லது அனைத்து உணவுகள், நீர் அல்லது இரண்டையும் விருப்பப்பட்டு, குறிப்பிட்ட நேரம்வரை உண்ணாமல் தவிர்ப்பது ஆகும். சமஸ்கிருதத்தில் விரதம் என்பது உறுதியான என பொருள்படும். உபவாசம் என்பது கடவுளுக்கு அருகில் எனப்பொருள்படும். உண்ணா விரதம் என்பது ஒரு நாள் விட்டு ஒரு நாளோ, தொடர்ந்தோ அவரவர் தேவைக்கு ஏற்ப கடைப்பிடிப்பதாகும். உடல் நலம் சீர்பட உண்ணாநிலை சிறந்த பயன்தரும் சிகிச்சையாகும். உண்ணாநிலை கடைப்பிடித்திட மனதினை தயார்படுத்திக்கொள்ள வேண்டும். இயற்கை மருத்துவரின் ஆலோசனையின் அடிப்படையில் தான் நீண்ட நாள் உண்ணாநிலை மேற்கொள்ள வேண்டும். உண்ணாநிலையின் காலம் நோயாளியின் வயது, நோயின் தன்மை. நோய்க்கு எடுத்துக்கொண்ட மருந்தின் அளவு ஆகியவற்றின் அடிப்படையில் உண்ணா நோன்பிற்கான காலம் கடைப் பிடிக்கப்படுகிறது. தேவை ஏற்படும் போது தொடர்ச்சியாக குறைந்த அளவில் இரண்டு அல்லது மூன்று நாள்கள் அதிகபடுத்திக் கொள்ளலாம்.

உண்ணாநிலையில் இருக்கும்பொழுது அனுபவம் உள்ளவர்களின் வழிகாட்டுதலுடன், நல்ல ஓய்வுடன் நீர், பழச்சாறு, காய்கறிசாறு இவற்றினை பயன்படுத்தலாம். சிறந்த பலனையும், பாதுகாப்பையும், அளிக்க கூடியது எலுமிச்சை பழச்சாறு ஆகும். உண்ணாநிலை யின் போது உடலில் தேக்கி வைக்கப்பட்டிருக்கும் கழிவு கள் அதிகம் வெளியேறுகின்றன. கார வகை சாறு மற்றும் சர்க்கரை கலக்காத (இயற்கையிலேயே பழங்களில் சர்க்கரை உள்ளது). இந்த பழச்சாறுகள் வலிமை தருகின்றன. பழச்சாறுகள் தயாரித்திட செழுமையான பழங்களில் இருந்து தயாரிப்பது அவசியமானதாகும். உடனுக்குடன் தயாரிக்கப்பட்ட பழச்சாறையே பயன்படுத்த வேண்டும். தகரப்பெட்டிகள், பிரிட்ஜ்களில் (உறை நிலை பெட்டி)வைத்த பழங்களை பயன்படுத்தக்கூடாது. உண்ணா நிலைக்கு முன் எனிமா கொடுத்து வயிற்றை தூய்மை படுத்திக்கொள்ள வேண்டும். ஒரு நாள் விட்டு ஒரு நாள் எனிமா எடுத்துக்கொள்ள வேண்டும். 6 முதல் 8 டம்ளர் நீர் உட்கொள்ள வேண்டும். உடலில் தேங்கியிருக்கும் தேவையில்லாத கழிவுகளை வெளியேற் றுவதற்கு அதிகப்படியான சக்தி தேவையாகிறது. எனவே இந்த சமயத்தில் உடல் ஓய்வு, மன அமைதி தேவைப்படுகிறது.

உண்ணா நிலையினை முடிக்கும் முறையில் தான் உண்ணாநிலையின் பயன்கள் அடங்கி உள்ளன. உணவு உட்கொள்ளும் முறையினை பொறுத்தும் உண்ணாநிலையின் பலன் அடங்கியுள்ளது. அதிகமாக சாப்பிடக்கூடாது. மெதுவாக மென்று சாப்பிட வேண்டும். உண்ணா நிலை முடிவிற்கு பிறகு சாதாரண உணவு முறைக்கு திரும்ப வேண்டும்.

## உண்ணாநிலை - நன்மை - உடலியல் தாக்கம்

பழங்காலம் முதல் தற்காலம் வரை வரலாற்றில் மருத்துவர்கள் உண்ணா நிலை சிகிச்சையை பல்வேறு கட்டுபாடுகளுடன் முறைப்படி செயல்படுத்தினர். துவக்க காலத்தில் அறிவியல் பூர்வமான வழிகாட்டுதலின்றி, புரிதல் இன்றி நோயை குணப்படுத்த உண்ணா முறையை கடைப்பிடித்து வந்தனர். ஆனால் தற்காலத்தில், உண்ணா நிலையில் விலங்குகளின் உணவு முறையைக்கொண்டு விலங்குகளில் ஏற்படும் மாற்றம், விளைவு, பலன்களை அறிந்து அதனடிப்படையில் உண்ணா நிலை மேற் கொள்ளப்பட்டு வருகிறது. உடலில் ஏற்படும் வளர்சிதை மாற்றங்கள் அடிப்படையில், அவர்களது வயது - உடல் நலத்திற்கும் ஏற்றவாறு உண்ணா நிலையினை மேற் கொள்ளலாம்.

உண்ணாநிலையால் உடல் நிலையில் ஏற்படும் மாற்றங்களில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் - இன்சுலினின் செறிவு தன்மை, அதிகரிக்கும் இதனால் பிளாஸ்மாவில் உள்ள குளுகோஸின் அளவுகள் கட்டுப்படுத்தப்படும்.

## மண் சிகிச்சை

மண் சிகிச்சை முறை மிகவும் எளிமையானது. நிலத்தில் 3 முதல் 4 அடி ஆழத்தில் தோண்டி மண் எடுத்துக்கொள்ளவேண்டும். இதில் கற்கள், துண்டுகள், இரசாயான கலவைகள் கண்டிப்பாக இருக்கக்கூடாது. இயற்கையின் பஞ்ச பூத சக்திகளில் மண் ஒன்று ஆகும். இது உடல் ஆரோக்கியத்திற்கும், நோய்களை குணப்படுத்தவும் துணைசெய்யும்.

## மண் சிகிச்சையினால் ஏற்படும் விளைவுகள்

இயற்கையின் ஐந்து கூறுகளில் மண் ஒன்றாகும். இது நலம் மற்றும் நோயிலும் மிகஉயர்ந்த நன்மையை ஏற்படுத்தவல்லது, மண்ணை உபயோகப்படுத்து வதனால் ஏற்படும் நன்மைகள்:

சூரிய ஒளியில் உள்ள சக்திகளை உடலுக்கு பெறச்செய்கிறது.

குளிர்ந்த மண்ணை உடலில் தடவி வெகு நேரம் உலராமல் இருப்பதன் மூலம் உடலின் வெப்பம் தணிந்து உடல் சம நிலை அடைகிறது.

உடலில் பூசிய மண்ணுடன் நீரையும் சேர்ப்பதால் தேவையான அடர்த்தியும் , உருவமும் எளிதாக கிடைக்கிறது.

## மலிவானது எளிதாக கிடைக்கக் கூடியது.

மண் சிகிச்சைக்கு தயார் செய்யும் முன்பே மண்ணை உலர வைத்து, கற்கள், மண்ணில் கலந்துள்ள இதர பொருள்களை பிரித்து விட்டு பயன்படுத்த வேண்டும்.

## உபயோகிக்கும் முறை


சலித்த, மெல்லிய மண்ணை ஈரமான துணியில் நோயாளியின் வயிற்று அளவுக்கு ஏற்றவாறு கட்டி, செங்கல் வடிவ அளவில் நோயாளியின் வயிற்றின் மேல் வைக்க வேண்டும். குளிர்ந்த காற்று வீசினால் குளிர்ந்த காற்று படாதவாறு மேலே போர்த்த வேண்டும்.

## மண்கட்டியின் பயன்கள்

மண்கட்டியினை அடிவயிற்றில் பயன்படுத்தும் பொழுது ஜீரணகோளாறுகளை போக்குகிறது. உடல் சூட்டை குறைக்கிறது.

மொத்தமாக தயாரிக்கப்பட்ட மண்கட்டிகளை தலையில் வைத்து பயன்படுத்தும்பொழுது அதிகப்படியான தலைவலியும் உடனடியாக சரிசெய்கிறது.

இதை கண்கள் மீது பயன்படுத்தும் போது கண் மற்றும் பார்வை பிரச்சினைகளான இமைப்படல அழற்சி, கண்விழி அரிப்பு, ஒவ்வாமை, கண்விழி அழுத்தம்,




கிட்டப்பார்வை மற்றும் தூரப்பார்வை முதலிய பிரச்சினைகளை சரிசெய்கிறது.

## முகத்திற்கு பயன்படுத்துதல்

சுத்தம் செய்யப்பட்ட மண் 30 நிமிடத்திற்கு வைத்திருப்பதனால் தோல்நிறம் அதிகரிக்கின்றது. கரும்புள்ளிகள், சிறுசிறு பொத்தல்கள் ஆகியவை சரிசெய்யப்படுகின்றன. மேலும் இது கண்களுக்கு கீழ் உள்ள கருவளையங்களை சரிசெய்வதற்கும் பயன்படுகிறது. 30 நிமிடம் கழித்து குளிர்ந்த நீரால் முகத்தை சுத்தமாக கழுவ வேண்டும்.

## மண் குளியல்

நோயாளி அமர்ந்த நிலையிலோ அல்லது படுத்திருக்கும் நிலையிலோ மண்ணை பூச வேண்டும். இது தோலில் இரத்த சுழற்சியும் வலிமையையும் அளிக்கின்றது. மண் குளியலின் போது நோயாளிக்கு சளி பிடிக்காதவாறு கவனமாக கடைப்பிடிக்கவேண்டும். நோயாளியின் குளிர்ந்த நீரால் நோயாளியின் உடல் முழுதும் தெளிக்க வேண்டும். நோயாளி மிகவும் குளிர்ச்சியாக உணர்ந்தால் சுடுநீர் பயன்படுத்தலாம், உடனடியாக நோயாளியின் உடலினை துவட்டி உஷ்ணப்படுத்திக்கொள்ளவேண்டும். 45 முதல் 60 நிமிடங்கள் வரை மண் குளியல் செய்யலாம்.

## மண்குளியலின் பயன்கள்

உடல் மற்றும் தோல் காயங்களை சரிசெய்வதில் மண்குளியல் சிறந்தபலனை தருகிறது.

உடலிற்கு குளிர்ச்சியூட்ட பயன்படுகிறது.

உடலில் உள்ள விஷத் தன்மையை நீர்க்கச்செய்து, உறிஞ்சி வெளியே எடுத்து விடுகிறது.

பசியின்மை, மனஉளைச்சலினால் ஏற்படும் தலைவலி, அதிக இரத்த அழுத்தம், தோல் நோய்கள் முதலியவற்றிற்கு சிறந்தமுறையில் சிகிச்சை பயன்படுகிறது.

மலச்சிக்கலில் இருந்து விடுபடுவதற்கு காந்திஜி மண் குளியலையே பயன்படுத்தினார்.

## நீர்ச் சிகிச்சை

நீர் சிகிச்சை இயற்கை வைத்தியத்தின் ஒரு பகுதியாகும். இந்த சிகிச்சையில் நீரை பல்வேறு வழிகளில் பல்வேறு விதத்தில் பயன்படுத்தலாம். இந்த நீர் சிகிச்சை முறையானது தொன்று தொட்டு பழங்காலம் முதலே பயன்பாட்டில் உள்ளது. நோயின் தன்மைக்கேற்றவாறு குளிர்ந்த நீரிலோ, நீரின் வெப்பத்தை கூடுதலாக்கியோ குறைத்தோ சிகிச்சை மேற்கொள்ளலாம். சூடாக, குளிர்ச் சியாக, நீர்தன்மையாக ஆவியாக, ஐஸ் கட்டிகளாகவும் உட்புறம், வெளிப்புறமும் பயன்படுத்தலாம். நீர் சிகிச்சை யானது பழங்காலம் முதற் கொண்டே நோய்களுக்கு தீர்வளிக்கும் முகவர் போல் செயல்படுகிறது.

# வாரியாரின் சாமர்த்தியம்

திருவாரூரில் பெரிய கோவிலில் மகாபாரதச் சொற்பொழிவு நிகழ்த்தினார் திருமுருக கிருபானந்த வாரியார்.

யாரை எப்படி எந்த இடத்தில் பாராட்டினால் அவர்கள் நிறைவடைவார்கள் என்று கண்டறிந்து வைத்திருக்கும் அனுபவம் வாரியாருக்கு உண்டு.

எத்தனையோ பேர் கதைசொல்லிகளாக இருக்கிறார்கள் என்றாலும் திருமுருக கிருபானந்த வாரியார் போன்று மக்கள் உள்ளங்கவர்ந்தவர் இன்னொருவர் தெரியவில்லை.

இசை, இலக்கியம், புராணங்கள் என எல்லாவற்றிலும் நிறைஞானம் அவருக்கு வாய்த்திருந்தது. எல்லாவற்றையும் மிஞ்சி அவருடைய நகைச்சுவை, பேச்சுக்கு மெருகூட்டியது எனலாம். திருவாரூரில் பெரிய கோவிலில் மகாபாரதச் சொற்பொழிவு நிகழ்த்தினார்.

மு.ரா.சன்ஸ் என்ற துணிக்கடை அன்று திருவாரூரில் பிரபலம். அவர்கள் அன்றைய நிகழ்ச்சியின் உபயதாரர். வாரியார் கதைசொல்ல ஆரம்பித்த சிறிது நேரத்தில் விழா ஏற்பாட்டாளர் அவரிடம் சென்று சாமி இன்று மு.ரா.சன்ஸ் உபயம், பெரியமுதலாளி வந்திருக்கிறார். அவங்களைப் பாராட்டி ரெண்டு வார்த்தை சொல்லுங்க என்றார்.

சரி, சரி போய்யா என்ற வாரியார் அதுபற்றி எதுவும் சொல்லாமல் கதை சொல்லிக்கொண்டிருந்தார். அமைப்பாளர் மறுபடியும் வாரியாரிடம் சென்று, 'சாமி அவரு போயிருவாரு.. இப்பவே கொஞ்சம் பாராட்டுங்க என்றார். வாரியார், 'கதை சொல்லும்போது இடைஞ்சல் பண்ணாதே போய்யா' என்று சிடுசிடுத்தார்.

பிறகு, கதையில் திரௌபதியை துச்சாதனன் சபையில் அவமானப்படுத்தும் இடம் வந்தபோது, துச்சாதனன் இழுக்க இழுக்க பாஞ்சாலி புடைவை வளர்ந்த வண்ணமாகவே இருந்தது. அதை அன்று வாரியார் இவ்வாறு கூறினார். கலர் கலரா சேலை வந்தது. பச்சையில மஞ்ச பார்டர் மயில் முந்தி, அரக்கு கலர் பச்சை பார்டர், கூஜா முந்தி.. இப்படிப் பலப்பல கலரிலே வந்ததும் துரியோதனன் நினைச்சான், அட இது மாதிரி கிடைச்சா பானுமதிக்கு வாங்கித் தரலாமேன்னு.. துச்சாதனன் இழுக்கிறதை மறந்து சேலையை ரசிக்க ஆரம்பிச்சிட்டான்.

இவனுக கிடக்கானுங்க.. கண்ண பரமாத்துமாவே அசந்துட்டாரு போங்க. பாமாவுக்கு ஒன்னு ருக்மணிக்கு ஒன்னு வாங்கித் குடுத்துட வேண்டியதுதான்னு நினைச்சு, புடைவையை அனுப்புற தேவதைகிட்ட கேக்குறாரு, 'சேலையெல்லாம் எங்கேருந்து வருது'? தேவதை சொல்லுது 'சுவாமி எல்லாம் மு.ரா.சன்ஸ்லேருந்து வருது'.. இதை வாரியார் சொன்னவுடன், கூட்டம் கலகலத்தது, சிரிப்பும் கைதட்டலும். மு.ரா.சன்ஸ் முதலாளி வாழ்நாளில் அப்படி ஒரு மகிழ்ச்சியை அடைந்ததே இல்லை.



யாரை எப்படி எந்த இடத்தில் பாராட்டினால் அவர்கள் நிறைவடைவார்கள் என்று கண்டறிந்து வைத்திருக்கும் அனுபவம் வாரியாருக்கு உண்டு.




கல்வி (Education) என்பது ஒரு மனிதனின் அறிவு மட்டுமல்ல, அவரின் ஒழுக்கம், உடல், மனது மற்றும் சமுதாய மதிப்பு, இவை அனைத்தையும் உயர்த்தும் ஒரு சமூக அமைப்பாகும். கல்வி என்பது ஒரு சமூக நிறுவனம். அறிவு, திறமை போன்றவற்றையும் தந்து ஒரு புதிய சமூகத்தை உருவாக்கி பண்பாடு, நடத்தை, போன்றவற்றையும் தந்து மனிதனை ஒரு முழுமையான ஆற்றல் உள்ள ஒரு மனிதனாக மாற்றுகிறது.

**கல்வி குறித்து வழங்கப்படும் பத்து பழமொழிகள்**

கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலகளவு
அரைக் கல்வி முழு மொட்டை
அறிவில்லாத ஆர்வம் சுடரில்லாத நெருப்பு
கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாஞ் சிறப்பு
கல்லாதவரே கண்ணில்லாதவர்
தவத்துக்கு ஒருவர் கல்விக்கு இருவர்
சென்ற இடம் எல்லாம் சிறப்பே கல்வி
கற்கையில் கல்வி கசப்பு; கற்றபின் அதுவே இனிப்பு
கல்வி இல்லாச் செல்வம் கற்பில்லா அழகு
கல்வி உள்ள வாலிபன் கன கிழவனே
கல்வி ஒன்றே அழியாச் செல்வம்
அறிவுடையாரை அரசனும் விரும்புவான்
ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது

**அறிவின் பெருமையை விளக்கும் பழமொழிகள்**

ஐயமே அறிவின் திறவுகோல்.
நம்மை அறிவதே நமக்கு அறிவாகும்.
அறிவுடையாரை அரசனும் விரும்புவான்.
அறிவு தன் விலை அறியும்.
அறிய அறியக் கெடுவார் உண்டா?
அரைகுறை அறிவு ஆபத்தில் முடியும்.
அறிவீன இடத்தில் புத்தி கேளாதே.
அறிவில்லாத ஆர்வம் சுடரில்லாத நெருப்பு.
அறிவீனர் தமக்கு ஆயிரம் உரைக்கினும் அவம்.
அறிவில்லார் சிநேகம் அதிக உத்தமம்.

# கல்விக்கதிர்

- அகரன் -

## தகவல் களஞ்சியம்



கணிப்பொறியின் கண்டுபிடிப்பில் விளைந்த நன்மைகளுள் குறிப்பிடத்தக்கது அதன் தகவல் சேமிப்புத் திறன். ஒரு நூலகத்திலுள்ள அனைத்து நூல்களின் தகவல்களையும் ஒரு கணிப்பொறியில் ஒரு கையகல மின்காந்த வட்டில் சேமிக்க முடியும். அப்படியெனில் பல கணிப்பொறிகளைக் கொண்ட பிணையத்தில் எவ்வளவு தகவல்களைச் சேமிக்க முடியும்? பல்லாயிரக் கணக்கான கணிப்பொறிப் பிணையங்களை உள்ளடக்கிய இணையத்தில் எவ்வளவு தகவல்களைச் சேமித்து வைக்க முடியும் என்பதைச் சற்றே எண்ணிப் பாருங்கள். எண்ணிப் பார்க்க முடியாத அளவு தகவல்கள் இணையத்தில் சேமித்து வைக்கப்பட்டுள்ளன. மனித குலம் இதுவரை திரட்டிய அறிவுக் களஞ்சியம் முழுக்க இணையத்தில் சேமிக்கப்பட்டுள்ளது எனில் மிகையாகாது.

இயற்பியல், வேதியியல், உயிரியல் போன்ற இயற்கை அறிவியல், பொறியியல், மருத்துவம், சட்டம், இலக்கியம் போன்ற வெவ்வேறு துறைகள் சார்ந்த தகவல்கள் அனைத்தும் குவிந்து கிடக்கின்றன. கலைக் களஞ்சியங்கள், ஆவணக் காப்பகங்கள், ஆலோசனை மையங்கள் என்னும் பல்வேறு வடிவங்களில் அவை சேமிக்கப்பட்டுள்ளன. பல்கலைக்கழகங்கள், ஆய்வுக் கூடங்கள், நூலகங்கள், பதிப்பகங்கள், தொண்டு நிறுவனங்கள் ஆகியவற்றின் வலையகங்களிலும் தகவல்கள் சேமிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் பெரும்பாலான தகவல்கள் இணையப் பயனாளர்களுக்கு இலவசமாகக் கிடைக்கின்றன என்பதும், குறிப்பிட்ட தகவல் எந்த நாட்டில், எந்தக் கணிப்பொறியில் சேமித்து வைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிந்து வைத்திருக்க வேண்டிய அவசியம் இல்லாமலே அத்தகவலை மிக எளிதாகத் தேடிப் பெற முடியும் என்பதும் குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

அனைத்துவகைத் தகவல்களையும் அகரவரிசையில் அல்லது துறை வாரியாகத் தரும் நூலினைக் 'கலைக்களஞ்சியம்' (Encyclopedia) என்கிறோம். 'என்சைக்ளோபீடியா பிரிட்டானிக்கா' (Encyclopedia Britannica) மிகவும் செல்வாக்குப் பெற்ற கலைக்களஞ்சியம் ஆகும். இதன் அண்மைக்காலப் பதிப்பு (2007) 32 தொகுதிகளைக் கொண்டது. 65 ஆயிரம் கட்டுரைகளில் 4 கோடியே 40 லட்சம் சொற்களைக் கொண்டது.

24 ஆயிரம் விளக்கப் படங்கள் உள்ளன. இந்தக் கலைக் களஞ்சியம் புத்தக வடிவில் மட்டுமன்றி இணையத்தில் http://www.britannica.com என்னும் வலையகத்திலும் சேமிக்கப்பட்டுள்ளது. இதிலுள்ள தகவலை 7 நாள்களுக்கு மட்டும் இலவசமாகப் பெறலாம். அதன்பிறகு ஆண்டுக்கு 70 டொலர் கட்டணம் செலுத்திப் பெறலாம். இதேபோல 30 தொகுதிகளைக் கொண்ட 'என்சைக்ளோபீடியா அமெரிக்கானா' (Encyclopedia Americana) என்னும் கலைக்களஞ்சியமும் கட்டண அடிப்படையில் இணையத்தில் கிடைக்கிறது. இவை தவிர, 'காம்ப்டன்ஸ் என்சைக்ளோபீடியா', 'வேர்ல்டு புக் என்சைக்ளோபீடியா' போன்ற கலைக் களஞ்சியங்களும் இணையத்தில் கிடைக்கின்றன. http://www.encyclopedia.com என்னும் வலையகம் 49 கலைக்களஞ்சியங்கள், 73 அகராதிகள் (Dictionaries) மற்றும் சொற்களஞ்சியங்களிலிருந்து (Thesaurus) தகவலைத் தேடித் தரும்.

'விக்கிப்பீடியா' என்பது இணையத்தில் மிகவும் செல்வாக்குப் பெற்ற கலைக்களஞ்சியம் (http://www.wikipedia.org) ஆகும். இதன் சிறப்புக் கூறுகள்: (1) இதில் தமிழ் உட்பட உலகின் 265 மொழிகளில் தகவல்கள் சேமிக்கப்பட்டுள்ளன. (2) எவர் வேண்டுமானாலும் தகவல்கள் தரலாம். (3) சேமிக்கப்பட்டுள்ள தகவல்களில் தவறுகள் இருப்பின் சுட்டிக் காட்டலாம், திருத்தம் செய்யலாம். (4) விக்கிப்பீடியாவின் அனைத்துத் தகவல்களும் முற்றிலும் இலவசமாகக் கிடைக்கின்றன. 'விக்கிமீடியா பவுண்டேஷன்' என்னும் நிறுவனம் இணையப் பயனர்களின் பங்களிப்போடு இந்தத் திட்டப்பணியைச் செவ்வனே நிறைவேற்றி வருகிறது. http://ta.wikipedia.org என்னும் வலையகத்தில் தமிழ் மொழியில் சேமிக்கப்பட்டுள்ள தகவல்களைத் தேடிப் பெறலாம். பிற மொழிகளைவிட ஆங்கிலத்தில் கூடுதலான நிறைவான தகவல்கள் கிடைக்கின்றன (http://en.wikipedia.org)

# பிரபலமான திருக்குறள்கள்

**அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது.- குறள் 45**

விளக்கம்

இல்லற வாழ்க்கையானது அன்பினையும் அறத்தினையும் உடையதாக இருக்குமேயானால் அதுவே இல்லறத்தின் பண்பும் பயனுமாகும்.

**அகர முதல எழுத்தெல்லாம் ஆதி**
**பகவன் முதற்றே உலகு. - குறள் 1**

விளக்கம்

எழுத்துக்கள் எல்லாம் அகரத்தை அடிப்படையாக கொண்டிருக்கின்றன. அதுபோல உலகம் கடவுளை அடிப்படையாக கொண்டிருக்கிறது.

**தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்**
**கற்றனைத் தூறும் அறிவு. - குறள் 396**


விளக்கம்

மணலில் உள்ள கேணியில் தோண்டிய அளவிற்கு நீர் ஊறும், அதுபோல் மக்களின் கற்ற கல்வியின் அளவிற்கு அறிவு ஊறும்.

# கலைக் கதிர்



## தம்பலகாமத்தின் முதுசமாக கதிர் திருச்செல்வத்தின் உயிரோடு நானாக




சமூகத்தின் இயங்கியலை அது உருவாக்கிய நியதிகளும் வழக்காறுகளுமே தீர்மானிக்கின்றன.சமூகத்தின் தொடர் இயங்கியலில் ஏற்படும் குறுக்கீடுகள் முரண்களாகவும் பிரளயங்களாகவும் மாறி விடுகின்றன. இந்த குறுக்கீடுகள் ஒரு வகையான கல்லெறிதல்கள்தான்.

எழுபதுகளின் ஈற்றிலும் எண்பதுகளின் தொடக்கத்திலுமான தமிழ் சமூகத்தின் மீதான கல்லெறிதல்கட்கு வினையாற்ற வேண்டிய நிர்ப்பந்தந்துக்கு உள்ளாக்கப்பட்ட இளையோரின் பேரெழுச்சிகள் அமைப்புக்களாகவும் இயக்கங்களாகவும் உருமாறிற்று.

நான் குறிப்பிட்ட காலகட்டத்தில் உருவான ஒரு விடுதலை அமைப்பின் பின்புலம் சார்ந்து எழுதப்பட்ட நாவலாக வெளிவந்துள்ளது திருமலை தம்பலகாமத்தைச் சேர்ந்த எழுத்தாளர் கதிர்.திருச்செல்வம் அவர்களின் உயிரோடு நானாக நாவல்.இது மட்டக்களப்பு மகுடம் பதிப்பகத்தின் அறுபத்து மூன்றாவது வெளியீடாகும்.

பொதுவாக ஈழப்போர் சார்ந்த அனேக பிரதிகள் வட புலத்திலிருந்து வெளிவருகையில் கிழக்கிலிருந்து இந்த நாவல் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.போர் சார்ந்த பிரதிகள் இறுதிப்போரை மையமாக வைத்து எழுதப்படுகையில் இந்த நாவல் காலத்தை பின்னகர்த்தி ஈழப்போரின் ஆரம்ப நாள்களில் நடந்த சம்பவங்களை விவரிக்கிறது.

ஈழப்போர் சார்ந்த நாவல்களில் அனேகமானவை விடுதலைப்புலிகள் இயக்கம் சார்ந்து எழுதப்படுகையில் இந்த நூலானது ஈழ மாணவர் புரட்சி அமைப்பின் (ஈரோஸ்) பின்னணியில் எழுதப்பட்டிருக்கிறது.இதில் குறிப்பிடத்தக்க விடயம் யாதெனில் இந்த நாவலின் எந்தவோர் இடத்திலும் அமைப்பின் பெயர் சுட்டப்படவில்லை.அத்தோடு தலைமை குறித்தோ அல்லது அமைப்பின் வீரதீர செயல்கள் குறித்தோ எவ்வித வர்ணனைகளும் இல்லை.

இந்த நாவலின் முக்கியமான பேசுபொருள் யாதெனில், போரியல் சார்ந்து எழுதப்பட்ட பிரதிகளில் இஸ்லாமிய இளைஞர்களின் பங்களிப்பு குறித்தோ அல்லது முஸ்லிம்கட்கு போரில் ஏற்பட்ட அவலங்கள் குறித்தோ அனேகமான பிரதிகள் இருட்டடிப்பு செய்வதான குற்றச்சாட்டுகட்கு இடையில்,இந்த பிரதி முஸ்லிம் இளையோரின் போராட்ட கால பங்களிப்பு குறித்து பேசுவதாகும்.

வெறுமனே போராட்டம் விடுதலை குறித்த பிரச்சார அல்லது மலரும் நினைவுகளை போலல்லாது தம்பலகாமம் கிராமத்தின் வழக்காறுகள் குறித்தும் அதிகம் பேசுவதால் வாசகர்கட்கு சலிப்பினை தராத ஊடாட்டம் நடைபெறுவதாக கூறமுடியும்.

புனைவுக்கு அப்பாலான நிஜ சம்பவங்களை இந்த நாவல் கொண்டுள்ளதை நாவலை வாசிக்கையில் அறிந்து கொள்ளலாம்.

**- தி.லலிதகோபன் -**

# கம்பன் சொன்ன காதல்

## இலக்கிய நயம்



இராமாயணம் என்றால் இராமன் + அயனம் என்று அர்த்தம். அயனம் என்றால் வழி, பாதை என்று பொருள். தட்சிணாயனம், உத்தராயணம் என்று சொல்லுவதுப் போல.

இராமாயணம் என்றால் இராமன் காட்டிய வழி என்று பொருள்.

இராமனை தெய்வமாகத் தொழுபவர்கள், அவன் வழியில் நடக்க விரும்புபவர்கள், காதல் திருமணத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்கக் கூடாது ஏன் என்றால் இராமன் காதல் திருமணம் தான் செய்து கொண்டான்.

இது என்ன புதுக் கதையாக இருக்கிறது. இதுவரை யாருமே சொல்லவில்லையே. எத்தனையோ முறை இராமாயணம் படித்து இருக்கிறோம், கேட்டு இருக்கிறோம், யாரும், இதுவரை இராமன் காதல் திருமணம் செய்து கொண்டான் என்று சொன்னதே இல்லையே என்று நீங்கள் நினைக்கலாம்.

கம்பன் சொல்லியதை திரும்பிச் சொல்கிறேன். முடிவை நீங்களே எடுத்துக் கொள்ளுங்கள்.

காதல் எப்படி வரும் ? முதல் பார்வையிலேயே எங்கோ ஒரு மணி அடிக்கும். அடி வயிற்றில் இனம் புரியாத ஒரு சங்கடம். இவள் தானா? இவன் தானா என்று இதயம் ஒரு தடம் துடிப்பது மறக்கும். மீண்டும் ஒரு முறை பார்க்கத் தோன்றும். பார்த்துக் கொண்டே இருக்கத் தோன்றும். கிட்ட போக வேண்டும். பேச வேண்டும், கூடவே இருக்க வேண்டும் என்றெல்லாம் தோன்றும் என்று சொல்லுகிறார்கள். ஒரு கணம் கூட பிரிந்து இருக்க முடியாது. பிரிந்தாலும் மற்றவர் நினைவாகவே இருக்கும் என்றும் சொல்லுகிறார்கள்.

அப்படி எல்லாம் இராமாயணத்தில் இருந்ததாக சொல்லி இருக்கிறதா? ஒரு வேளை அப்படி சொல்லி இருந்தால் அது காதல் என்று ஏற்றுக் கொள்வீர்களா? இப்போதே முடிவு செய்து கொள்ளுங்கள்.

இராமன் மிதிலை நகர் வீதியில் வருகிறான். மாடத்தில் சீதை தோழிகளோடு பந்து விளையாடிக் கொண்டிருக்கிறாள். கை தவறி பந்து வீதியில் செல்லும் இராமன் மேல் விழுந்து விடுகிறது.

மாடத்தில் இருந்து சீதை எட்டிப் பார்க்கிறாள். பந்து எங்கிருந்து வந்தது என்று இராமன் மேலே பார்க்கிறான். அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்கிறார்கள்.

அந்த ஒரு கணத்தை கம்பன் புகைப்படம் கிளிக் செய்வது போல படம் படிக்கிறான்.

கணக்கில் அடங்காத நல்ல குணங்கள் உள்ள சீதையும் இராமனும் ஒருவரை ஒருவர் நோக்கினார்கள். அவர்கள் கண்கள் ஒன்றை ஒன்று கவ்விக் கொண்டது. அவர்கள் உணர்வுகள் ஒன்றுபட்டன. அண்ணலும் நோக்கினாள் , அவளும் நோக்கினாள்

என்கிறான் கம்பன்.

உலகில் எந்த மூலையில் தேடினாலும் இது போல ஒரு romantic பாடல் கிடைப்பது அரிது.

பாடல்

**எண்ண அரு நலத்தினாள் இனையள் நின்றுழி**
**கண்ணொடு கண் இணை கவ்வி. ஒன்றை ஒன்று**
**உண்ணவும். நிலைபெறாது உணர்வும் ஒன்றிட**
**அண்ணலும் நோக்கினான்: அவளும் நோன்கினாள்**

பொருள்

எண்ண அரு = எண்ணிப்பார்க்க அருமையான, கடினமான. எண்ணில் அடங்காத
நலத்தினாள் = நல்ல குணங்களை உடையவள்
இனையள் = இந்தத் தன்மை உடையவள்
நின்றுழி = நின்ற பொழுது
கண்ணொடு கண் இணை கவ்வி = இருவர் கண்களும் ஒன்றை ஒன்று கவ்வி
ஒன்றை ஒன்று உண்ணவும் = ஒன்றை மற்றொன்று உண்ணவும்
நிலைபெறாது உணர்வும் ஒன்றிட = நிலை பெறாத உணர்வும் ஒன்றிட
அண்ணலும் நோக்கினான் = அண்ணலும் நோக்கினான்
அவளும் நோன்கினாள் = அவளும் நோக்கினாள்

சரி. இந்தப் பாடலை எத்தனை ஆயிரம் முறை கேட்டு இருப்போம். இதில் என்ன பெரிய புதுமை இருக்கிறது. ஆனாலும், அதற்கு இவ்வளவு build up தேவையா என்று நீங்கள் கேட்பது புரிகிறது.

பார்ப்போம்.

இருவரில் யார் முதலில் பார்த்தது ? சீதை முதலில் பார்த்தாளா? இராமன் முதலில் பார்த்தானா ?

அண்ணல் நோக்கினான். அவளும் நோக்கினாள் என்று சொல்லி இருந்தால் முதலில் இராமன் பார்த்தான், பின் சீதையும் பார்த்தாள் என்று வரும்.

அவள்நோக்கினாள்.அண்ணலும் நோக்கினான் என்று சொல்லி இருந்தால் முதலில் சீதை பார்த்தாள். பின் இராமன் பார்த்தான் என்று வரும்.

கம்பன் அப்படி சொல்லவில்லை.

அண்ணலும் நோக்கினான். அவளும் நோக்கினாள் என்கிறான்.

இருவரும் ஒரே சமயத்தில் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

பார்வைகள் ஒன்றை ஒன்று ஒரே சமயத்தில் பார்த்துக் கொண்டன. இன்னும் சொல்லப் போனால், பார்வைகள் பார்த்துக் கொள்ளவில்லையாம்.

பார்வைகள் சந்தித்தன. அவர்களால் அந்த பார்வையை நகர்த்த முடியவில்லை. கண்ணை எடுக்க முடியவில்லை. அவளோ தோழிகளோடு மாடத்தில் நிற்கிறாள். அவனோ, வீதியில் பலவித மக்களோடு நடந்து போய் கொண்டிருக்கிறான். நின்று பார்க்க முடியாது. பார்வையை தவிர்த்தே ஆக வேண்டும். ஆனாலும் முடியவில்லை.

கண்ணொடு கண் இணை கவ்வி

கண்கள் ஒன்றை ஒன்று கவ்விக் கொண்டனவாம். கவ்விக் கொண்டது என்றால் அதை எளிதில் எடுக்க முடியாது. lock ஆகி விட்டது என்று சொல்வார்களே அது மாதிரி. இழுத்தாலும் வர மாட்டேன் என்கிறது. இருவருக்கும் சங்கடம்தான். பார்வையை மாற்ற விரும்புகிறார்கள். முடிந்தால்தானே. கண்கள் கவ்வி பிடித்துக் கொண்டன. அறிவு சொல்கிறது, ஏய், எல்லோரும் பார்க்கிறார்கள். அப்படி பார்க்காதே, நாகரிகம் இல்லை என்று. கண் விட்டால் தானே.

சரி, இப்படி ஒரு பெண் முன் பின் தெரியாத ஒரு ஆணை இப்படி பார்க்கலாமா? அது அவ்வளவு நல்ல செயலா. ஒரு பெண் பால்கனியில் நின்று தெருவில் போகும் ஆணை முறைத்துப் பார்த்து கொண்டிருந்தால், நாம் அவளைப் பற்றி என்ன நினைப்போம்.

அப்படி எதுவும் தவறாக நினைத்துக் கொள்ளக் கூடாது என்று முதலிலேயே கம்பன் சொல்லி விடுகிறான் எண்ண அரு நலத்தினாள்.

எண்ணில் அடங்கா நல்ல குணம் கொண்டவள் என்று. பொறுமை, கருணை, அன்பு, பாசம், நேசம், அருள் என்று எத்தனை நல்ல குணங்கள் உன்டோ அதற்கெல்லாம் மேலும் நல்ல குணங்கள் உள்ளவள் அவள். இருந்தும் என்னவோ அவனைப் பார்த்ததும் காதல் வந்து விட்டது.

சரி, இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். அவர்கள் மனதில் என்ன ஓடியது?

‘அடடா, இவள் எவ்வளவு அழகாக இருக்கிறாள். இவளை திருமணம் செய்து கொண்டால் எவ்வளவு நல்லா இருக்கும். அதுக்கு முன்னாடி அவளை கூட்டிக் கொண்டு பார்க், பீச், சினிமா என்று ஜாலியா சுத்தலாம் என்றெல்லாம் நினைத்திருப்பானோ? அவள் என்ன நினைத்து இருப்பாள்? என்ன ஒரு கம்பீரமான ஆள் இவன். இவனை திருமணம் செய்து கொண்டால் வாழ்க்கையில் செட்டில் ஆகி விடலாம் என்று அவள் நினைத்து இருப்பாளோ’.

இரண்டுமே இல்லை. அதெல்லாம் நம்ம ஊரு லோக்கல் கதாநாயகன், கதாநாயகி நினைப்பது.

பின் அவர்கள் என்னதான் நினைத்தார்கள்.

ஒன்றுமே நினைக்கவில்லை என்கிறான் கம்பன்.

நிலைபெறாது உணர்வும் ஒன்றிட

இந்த உணர்ச்சிகள் இருக்கிறதே ஒரு நிலையில் நிற்காது. அலைந்து கொண்டே இருக்கும். அவர்கள் பார்த்த அந்த ஒரு கணத்தில் உணர்ச்சிகள் ஒன்று பட்டுவிட்டன. வேறு எந்த எண்ணமும் இல்லை. ஒன்றி விட்டது.

இத்தனையும் நிகழ்ந்தது ஒரு நொடியில். அல்லது அதற்கும் குறைவான நேரத்தில்.

சரி, ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள் அதை வைத்துக் கொண்டு அவர்கள் ஒருவரை ஒருவர் காதலித்தார்கள் என்று எப்படி சொல்லுவது ?

நேர்காணல்

# “எமக்கான பாதையை நாமே உருவாக்க தொடர்ந்து உழைக்க வேண்டும்”




**01) உங்களைப் பற்றிய சிறு அறிமுகம்?**

எனது பெயர் தர்ஷன் பென்ஜமின் யூலியன். திருகோணமலை மாவட்டத்தை பிறப்பிடமாக கொண்டிருந்ததால் சிறிய வயதிலிருந்தே இயற்கை மீது ஒரு விருப்பமும், ஈடுபாடும் இருந்து வந்தது. 2004ஆம் ஆண்டு தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆறு மாத கால புகைப்படக் கற்கை நெறியினை நீர்கொழும்பில் மேற்கொண்டிருந்தேன். அனைத்தும் சிங்கள மொழியிலேயே கற்க வேண்டியதாக இருந்ததால் சற்று கடினமாக இருந்தது. எனினும் எனது புகைப்படக் கலை ஆசான் பிரியங்கர ஹமக என்னை சிறப்பாக வழிநடத்தினார். புகைப்படக் கலை மீது கொண்ட ஆர்வத்தால் ஆறு மாத கால கற்கையின் பின் சிறந்த மாணவனாக என்னைத் தேர்ந்தெடுத்தார். அதனைத் தொடர்ந்து புகைப்படக் கலைஞராக எனது பணியைத் தொடங்கினேன். 2007ஆம் ஆண்டில் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற புகைப்பட கண்காட்சியை பார்வையிட எனது ஆசானுடன் சென்றிருந்தேன். அங்கு புகைப்படங்களை பார்க்கும் போது புகைப்படங்களை எடுத்த விதம், புகைப்படப் பார்வை, அதன் திடத்தன்மை, விசித்திர வெளிப்பாடு போன்ற அனைத்து விடயங்களும் என்னை என்னுடைய புகைப்படக் கலையில் திறன்பட்டு உயர வேண்டும் என்று சிந்திக்க வைத்தது. அதன்பின்பு ஓர் நாள் என்னிடம் புகைப்படத் துறை சார்ந்த அறிவு வேண்டுமா? சான்றிதழ் வேண்டுமா? எனக் கேட்டார். நான் ஒரே பதிலாக அறிவு தான் வேண்டுமென்றேன். அதன் நிமித்தம் புகைப்படத் துறையில் உள்ள ஆழ, அகல நுட்பங்களை அறிந்து கொள்ள இலங்கை தேசிய புகைப்படக் கலை சங்கத்தில் மூன்று வருட கற்கை நெறியை வெற்றிகரமாக பூர்த்தி செய்து மேலும் களனிப் பல்கலைக்கழகத்தில் ஒரு வருட பாடநெறிக் கற்கையையும் கற்று 2019இல் தேசிய தொழிற் தகைமை **(NVQ Level-4)** தகுதிச் சான்றிதழையும் பெற்றுக் கொண்டேன்.

**02) புகைப்படக் கலையை உங்களது களமாக தேர்ந்தெடுத்தமை குறித்து?**


இதற்கு சரியாக கூறுவதாயின் புகைப்படக் கலையை நான் தளமாக தேர்ந்தெடுத்தேன் என்பதை விட என்னை புகைப்படக்கலை தேர்ந்தெடுத்தது என்று சொல்லலாம். காரணம் பாடசாலைக் கல்வி நிறைவடைந்ததன் பின்பு ஒவ்வொரு இடங்களிலும் பணிபுரிந்து வந்த காலப்பகுதியில் ஒரு குறுகிய வட்டத்துக்குள் சுற்றியே இருந்தேன். ஆனால் புகைப்படக் கலைக்கான பயணத்தில் என்னை சிந்திக்க வைத்தது, தொடர வைத்தது, பார்வையை மாற்ற வைத்தது, ரசனைக்கான பாதையைக் காட்டியது, அனைத்தையும் நேசிக்க வைத்தது. இவ் அனைத்தையும் புகைப்படங்கள் மூலம் வெளிக்கொண்டு வர முடிந்தது. என் பெயருக்குப் பின் புகைப்பட கலைஞர் எனும் அடையாளத்தை தந்தது எனப் பெருமையாக இவ்விடத்தில் பதிவிட விரும்புகிறேன்.

**03) இக் கலையில் எவ்வாறான வகையிலமைந்த புகைப்படங்களை எடுத்து வருகிறீர்கள்?**

இக் கலையில் நிறையவே பல புகைப்பட வகைகள் உள்ளன. எனக்கு Wildlife photography, macro photography ஆகிய வகைப்பாட்டில் ஆர்வம் அதிகம். அதில் Wildlife photographyஇல் ஓரிடத்திற்குச் சென்றால் மணித்தியாலக் கணக்கு, நாள் கணக்கு என்று புகைப்படங்களை எடுப்பதற்கு பொறுமையாக இருந்து எடுக்க வேண்டும். இவ் வகைப் பிரிவில் ஆர்வம் இருந்தாலும் Macro photographyஇல் அதீத ஆர்வம். இதில் வீட்டைச் சுற்றி இருக்கின்ற கண்ணுக்கு தெரியாத சிறு வகையான உயிரினங்களை 25 – 30நிமிடங்கள் வரை நிலத்தில் படுத்த வண்ணம் மிகப் பொறுமையாக இருந்து நேர்த்தியான முறையில் எடுக்க வேண்டும். இவ்வாறான முறையில் நுட்பமுறையில் நுணுக்கங்களாக புகைப்படங்களை எடுத்து வருகிறேன்.

**04) இக் கலையில் உங்களுக்கான வாய்ப்புகள் எவ்வாறு உள்ளன?**

தேசிய மற்றும் சர்வதேச ரீதியிலான புகைப்படப் பிரிவுகளுக்கமைந்த போட்டிகளில் எனது புகைப்படங்களையும் அனுப்பி வருகின்றேன். பெரும்பாலும் இப் போட்டிகளில் எனது புகைப்படங்கள் தெரிவு செய்யப்பட்டு வெற்றிகளையும் தந்ததோடு கண்காட்சிக்காகவும் தெரிவு செய்யப்பட்டு வருகின்றன. அத்துடன் இக்கலை மூலம் எனக்கான அடையாளமும், அங்கீகாரமும் மிகுந்தளவில் இன்று கிடைக்கப் பெற்றுள்ளது என்பது ஒரு கலைஞராக என்னை மென்மேலும் ஊக்குவிக்கின்றது எனலாம்.



**05) இத்துறைக் கலைஞனாக சமூகத்திற்கு எவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றீர்கள்?**

நான் குறிப்பிட்டது போல எமது நாட்டில் புகைப்படக் கலைக்கான அறிவை கற்பதற்கான சந்தர்ப்பம் சிங்களம், ஆங்கில மொழியிலேயே காணப்படுகின்றது. ஆயினும் எனது அனுபவம் மூலம் அது எவ்வளவு சிரமம் என்பதை நான் நன்கு உணர்ந்தவன். 2015ஆம் ஆண்டு எனது தலைமையில் Trinco graphers ‡ society of photography எனும் அமைப்பை உருவாக்கினேன். இதன் மூலம் புகைப்படக் கலையில் ஆர்வமுள்ளவர்களை இணைத்துக் கொண்டு செயலமர்வுகள், கலந்துரையாடல்கள், அனுபவப் பகிர்வுகளை மேற்கொண்டிருந்தோம். மற்றும் பாடசாலை மாணவர்களுக்கான புகைப்படப் போட்டிகள், அங்கத்தவர்களுக்கான புகைப்படப் போட்டிகள், திறந்த புகைப்படப் போட்டிகள் (Open), புகைப்படக் கண்காட்சிகள் போன்றவற்றை நடாத்தி வந்தோம். தற்போது 291- Gallery - Academy of Photography எனும் பெயரில் தனியாக புகைப்படக் கலைக்கான பாட நெறிகளை செய்து வருகின்றேன். இவ் கற்கை நெறிக்கான அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழும் வழங்கப்பட்டு வருகின்றது.

**06) திருகோணமலை மாவட்டத்தில் இக்கலை மீதான பார்வையும், வரவேற்பும் எவ்வாறு உள்ளது?**

திருகோணமலை மாவட்டத்தில் புகைப்படக் கலைக்கான பார்வை சற்று கடினமாக இருந்தாலும் இன்று ஓரளவு வரவேற்பு உள்ளதாக நினைக்கின்றேன். காரணம் ஆரம்பத்தில் இக்கலை எமது மாவட்டத்தில் ஓர் புதிதாகத்தான் நோக்கப்பட்டது. ஆயினும் எமது முயற்சிகள் தொடர்ந்து கொண்டு செல்ல ஆரம்பித்ததன் விளைவாக இன்று ஓரளவிற்காவது வரவேற்பை அடைய முடிகின்றது. மேலும் இக்கலை ரீதியான கலைஞர்களும் சாதிப்பதற்காகவும், பரவலாக இக் கலைக்கான சமூகத்தின் பார்வை சரியான முறையில் வருவதற்காகவும் முயற்சியெடுத்து வருவதைக் காண மகிழ்ச்சியாக உள்ளது.

**07) புகைப்படத்துறை கலைஞர் ஒருவர் கைக்கொள்ள வேண்டிய உத்திகள் யாவை?**

ஒரு புகைப்படத்தை நாம் எடுக்கத் தொடங்கி அதனை சிறப்புற முடிக்கும் வரை முதல் உத்தியாக பொறுமை மிக மிக அவசியம். காரணம் நாம் எவ்வாறான புகைப்பட வகையை தெரிவு செய்து எடுக்க நினைத்தாலும், உதாரணமாக Wildlife photographyஇனை எடுத்துக் கொண்டால் ஒரு பறவையின் ஒவ்வொரு நடத்தைக் கோலங்களையும் பார்த்து, ரசித்து, சிந்தித்து எடுப்பதே மிகச் சிறந்த உத்தியாக இருக்கும். அவ்வாறான விடயங்களை கைக்கொள்ளும் போது மேலும் எமக்கு புகைப்படங்கள் மீதான ரசனையும், இக்கலை மீதான ஈடுபாடும் அதிகரிக்கும். இதைத் தவிர, சிறந்த சிந்தனை மிகு புத்தகங்களை வாசிக்க வேண்டும், இனிமையான பாடல்களை கேட்க வேண்டும், நல்ல திரைப் படங்களைப் பார்க்க வேண்டும், மாறுபட்ட கோணத்தில் சிந்திக்க வேண்டும், இயற்கையுடன் ஒன்றிணைய வேண்டும், சகல கலைஞர்களுடன் உரையாட வேண்டும், எமக்குள்ளேயே ஒவ்வொரு புகைப்படத்தை பற்றியும் பேச வேண்டும், வாசிக்க வேண்டும் மொத்தத்தில் புதிய சிந்தனைகளை புகுத்தி நுணுக்கமாக புகைப்படங்களை எடுப்பதே சாலச் சிறந்ததாக அமையும் என்பது எனது அனுபவம் மூலம் நான் கண்ட உண்மையாகும்.

**08) இக் கலையில், உங்களுக்கு கிடைத்த வெற்றிகள், விருதுகள் குறித்து?**

2009இல் வனவிலங்கு புகைப்படக்கலைப் போட்டியில் தகுதிச் சான்றிதழ், நீர்கொழும்பு புகைப்படக் கலைஞர்கள் சங்கத்தின் 10ஆவது ஆண்டு விழா புகைப்படப் போட்டியில் 2ம் இடம், 2010இல் கேகாலை புகைப்படக்கலை சங்கத்தின் புகைப்படக்கலைப் போட்டியில் 2ம் இடம், 2011இல் Sapphire விருது, 2012இல் 4ஆவது Biennial புகைப்படக் கலைப் போட்டியில் வெண்கலப் பதக்கம், 2018இல் நாததாரா – தகுதி சான்றிதழ், 2018இல் இலங்கை காடார்ந்த புகைப்படக்கலைப் போட்டியில் சிறந்த 50பேரில் ஒருவராக வன விலங்கு புகைப்படக்காரர், 2018இல் இணை விருது, 2019இல் வெண்கலப் பதக்கம் – ஆன்மீகம் மற்றும் நிறங்கள், 2021இல் புகைப்படக்கலைப் பிரிவில் கிழக்கு மாகாண இளங்கலை ஞர் விருது.

**09) நிறைவாக, சாதிக்க நினைக்கும் கலைஞர்களுக்கு கூற விரும்புவது?**

கமரா என்பது ஒரு கருவி மட்டுமே. எவ்வளவு தொழில்நுட்பம் வந்தாலும் எத்தனை கமராக்கள் இருந்தாலும் கமரா சிந்திக்காது. நான் தான் சிந்திக்க வேண்டும். ஒரு புகைப்படத்தை எந்தக் கோணத்தில் எவ்வாறு எடுக்க வேண்டும் என்ற சிந்தனை என்னுடையதாக இருக்கும். என்னுடைய சிந்தனை மற்றவர்களின் சிந்தனையாக இருக்காது. மற்றவர்களின் சிந்தனை என்னுடைய சிந்தனையாக இருக்காது. முடிந்தளவில் எமது சிந்தனையில் எவ்வாறு, எப்படி புகைப்படங்கள் எடுக்கின்றோம்? அப் புகைப்படங்கள் சமுதாயத்தில் எவ்வாறு பேசப்படுகின்றன? என்பதை நாம் படிப்படியாக முயற்சித்து எமது புகைப்படங்களைப் பார்த்தாலே எம்முடைய பெயரை சமுதாயமே அவர்களாகவே சொல்லும் வரை எமக்கான பாதையை நாமே உருவாக்க தொடர்ந்து உழைக்க வேண்டும். எனது புகைப்படம் மூலமாக எனது அடையாளம் தானாகவே வெளிவந்தால் எமக்கான அங்கீகாரம் கிடைத்துவிடும். ஆகவே அர்த்தமுள்ள புகைப்படங்களை எடுக்க வேண்டும். எங்களுடைய தனித்துவம் மூலம் சாதனைகளைப் புரியும் போது எமக்கான தனி அடையாளம் அதன் மூலம் கிடைக்க முயற்சி செய்வோம். சாதிப்போம். உலகம் ஓர் நாள் உன் பெயரையும் சொல்லும். எழுந்து வா தோழா! துணிந்து செல் தோழா!

# ஆயரின் பெயரில் அமைந்து அரும்பணியில் ‘பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர்’ நிறுவனம்

## யாழ் ஊடக அமையத்துடன் இணைந்து புதிய ஊடகப்பணிகள் – 10

- கலாநிதி ரூபன் மரியாம்பிள்ளை அடிகள் -
(ஊடக வருகை விரிவுரையாளர் - இலங்கை திறந்த பல்கலைக்கழகம்; ஓய்வு நிலை ஊடக வருகை விரிவுரையாளர் - யாழ் பல்கலைக்கழகம்
இயக்குநர் - பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர்)

**யாழ்ப்பாணம் மறைமாவட்ட ஓய்வு நிலை ஆயர் மேதகு கலாநிதி தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை பெயரிலே அமைக்கப்பட்ட பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் தொடக்கப்பட்ட கதை, அதற்கு ஓய்வு நிலை ஆயர் மேதகு கலாநிதி தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையின் பெயர் கொடுக்கத் தூண்டப்பட்ட காரணம் மற்றும் அதன் பணிகளைத் தொடர்ந்து விளக்குகிறது இக்கட்டுரை.**



பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் உருவாகக் காரணம் என்ன? இதற்கான காரணத்தை விளக்கும் விதமாக காவலூர் யோவான் அவர்கள் என்னுடன் மேற்கொண்டு பாதுகாவலன் பத்திரிகையில் வெளியான நேர்காணலைத் தந்திருந்தேன். அதன் தொடர்ச்சியை நோக்குவோம்.

### பாதுகாவலன் பத்திரிகையின் ஆசிரியர்பணி 1997 - 2007

இதன் பின்னர் 30 ஏப்ரல் 1997 முதல் பாதுகாவலன் பத்திரிகையின் ஆசிரியராக பொறுப்பேற்கும்படி அருள்



திரு.அன்ரன் மத்தாயஸ் அடிகளாரின் பணிக் காலத்தின் பின்னர் பணிக்கப்பட்டேன். 14 மார்ச் 1997 ஆம் ஆண்டு பாதுகாவலன் பத்திரிகையில் ஆசிரியராக நான் நியமிக்கப்பட்ட அறிவிப்பு அன்ரன் மத்தாயஸ் அடிகளாரால் வெளியிடப்பட்டிருந்தது. அது பின்வருமாறு அமைந்திருந்தது:-

### பாதுகாவலன் புதிய ஆசிரியர்

பாதுகாவலனின் புதிய ஆசிரியராக அருள்திரு.ரூபன் மரியாம்பிள்ளை அடிகளார் யாழ் ஆயரால் நியமிக்கப்பட்டுள்ளார். அவரின் வழிநடத்தில் பாதுகாவலன் மேலும் வளர்ச்சியுற வாசகர்களின் சார்பில் அவரை வாழ்த்துகிறேன். கடந்த ஆனி முதல் பாதுகாவலனின் வளர்ச்சிக்கு நீங்கள் தந்த ஒத்துழைப்பிற்கு எமது நன்றிகள்.

**அன்ரன் மத்தாயஸ்**

உண்மையில் யாழ் நகரில் ஏற்பட்ட பாரிய இடம் பெயர்வின் பின்னர் ஜீன் மாதம் 1996 முதல் மார்ச் மாதம் 1997 ஆம் ஆண்டு வரை அன்ரன் மத்தாயஸ் அடிகளார் ஆசிரியராக பணியாற்றினார். இதற்கு முன்னர் அன்ரன் மத்தாயஸ் அடிகளார் 1979 ஆம் ஆண்டு முதல் 1986 ஆம் ஆண்டு வரை ஆசிரியராக பணியாற்றி இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

23 நவம்பர் 1979 ஆம் ஆண்டில் இந்தியா திரு இருதய குருத்துவக் கல்லூரியில் மெய்யியல் கல்வியை மேற்கொண்டிருந்த போது அன்ரன் மத்தாயஸ் அடிகளாரின் பணிக்காலத்தில் வெளிவந்த எனது முதல் ஆக்கமான மௌன ஊர்வலம் என்ற சிறுகதையில் இருந்து பாதுகாவலன் பத்திரிகையில் நிறைய ஆக்கங்களை எழுதி வந்தேன்.

1979 ஆம் ஆண்டு முதல் 1997 ஆம் ஆண்டு வரை இப் பணி நீடித்தது. தொடர் ஆக்கங்களாகவும் தனி ஆக்கங்கள் ஆகவும் அவை அமைந்திருந்தன. பாதுகாவலன் ஆசிரியர் பணி ஏதோ ஒரு காலத்தில் எனக்கு வரலாம் என்ற ஒரு எண்ணம் இருந்திருந்தாலும் இவ்வளவு விரைவாக அப் பணியை நான் ஏற்க வேண்டியிருக்கும் என எண்ணவில்லை.

கேள்வி: பத்து ஆண்டுகால பாதுகாவலன் பணியில் உங்கள் சாதனைகள் எவை எனக் கருதுகிறீர்கள்?

(01) பங்குகளில் இருந்து பாதுகாவலனுக்கு பத்திரிகையாளர்களை தெரிவு செய்து அவர்களுக்கும் மற்றப் பத்திரிகையாளர்களுக்கும் பத்திரிகையியல் பயிற்சிகளை ஆண்டு தோறும் வழங்கினேன். அந்தப் பயிற்சிகளுக்கு வழங்கிய பாடக்குறிப்புக்களைப் புத்தகங்களாக வெளியிடத் தொடங்கினேன். இந்தப் புத்தக வெளியீட்டுப் பணியே யாழ் பல்கலைக்கழகத்தின் 72 லட்சம் ரூபா புலமைப் பரிசில் பெற்று ண்டனில் ஆய்வுக் கல்வியை மேற்கொள்ளவும் யாழ் பல்கலைக்கழகம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களில் ஊடக விரிவுரைப்பணிகளை ஆற்றவும் வழிசமைத்தது.

(02) பாதுகாவலன் பத்திரிகையாளர்களை மாதத்தின் ஒவ்வொரு முதல் சனிக்கிழமைகளிலும் ஒரு வானில் பல இடங்களுக்கும் அழைத்துச் சென்று நேரடியாகச் செய்தி சேகரிக்கும் களப்பயிற்சியை வழங்கினேன். அவை எல்லாம் செய்திகள் மற்றும் நேர்காணல்களாகப் பாதுகாவலனில் பிரசுரிக்கப்பட்டன.

(03) எனது சிறிய குருமட நாள்களில் நான் எழுதத் தொடங்கிய தவக்கால சிந்தனை என்ற பகுதியை பாதுகாவலன் பத்திரிகையாளர்களுக்கு அறிமுகப்படுத்தி ஆண்டு தோறும் வெளிப் பத்திரிகைகளில் தவக்கால சிந்தனைகளை வெளிவர வழிவகுத்தேன்.

(04) நூற்றாண்டு காலமாய் ஒரு இலச்சினை இன்றி வெளிவந்து கொண்டிருந்த பாதுகாவலன் பத்திரிகைக்கு முதற் தடவையாக ஒரு இலச்சினை உருவாக்கினேன். அதில் ஒளியும் வாழ்வும் உண்மையும் பாதுகாவலன் என்ற வசனங்கள் பொறிக்கப்பட்டு வேதாகம ஏட்டின் மேல் தீபம் ஒன்று அமைக்கப்பட்டு அது உலகிற்கு ஒளி தருவது போலவும் அந்த ஒளியினை இரண்டு கரங்கள் பாதுகாவலனாய் அணைந்து போகாமல் பாதுகாப்பது போலவும் அமைத்தேன். யாழ்ப்பாணம் என்பதைக் குறிக்க இரண்டு பனை ஓலைகள் கீழே இரண்டு பக்கமும் அமைத்தேன்.

(05) 1991ஆம் ஆண்டுவரை வாரப் பத்திரிகையாக வெளிவந்து பின்னர் மாற்றப்பட்ட பாதுகாவலன் பத்திரிகையை 23 மே 2004ஆம் ஆண்டு காலப்பகுதியில் திரும்பவும் வார இதழாக வெளியிட்டேன். இருப்பினும் அம்முயற்சியை தொடர முடியவில்லை.

(06) 1998ஆம் ஆண்டு யூன் மாதம் முதல் பாதுகாவ




லன் பத்திரிகை ஓவ் செற் அச்சுப் பதிவு முறையில் வெளிவரத் தொடங்கி யாழ்ப்பாணத்தில் இவ்அச்சு முறையில் வெளிவரத் தொடங்கிய முதல் பத்திரிகையாகத் தன்னை பதிவு செய்து கொண்டது.

(07) ஐரோப்பிய நாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் தமிழ்க் கத்தோலிக்க மக்களுக்கும் பாதுகாவலன் விற்பனையை விரிவுபடுத்தினேன்.

(08) 2001ஆம் ஆண்டு எனது ஆசிரியப்பணி காலத்தில் இலங்கை பத்திரிகையாளர் சங்கத்தின் சிறந்த வடிவமைப்பிற்கான தேசிய விருதை பாதுகாவலன் பத்திரிகை பெற்றது.

(09) 2001ஆம் ஆண்டு பாதுகாவலன் பத்திரிகை 125ஆவது ஆண்டு நிறைவை மலர் வெளியீட்டுடன் கொண்டாடியது. யாழ்ப்பாணப் பத்திரிகைகள் தமக்கிடையில் போட்டியையும் பொறாமையையும் அதிகம் கொண்டிருந்த அக்காலத்தில் யாழ்ப்பாணத்தின் எல்லாப் பத்திரிகை ஆசிரியர்களையும் பாதுகாவலன் மேடையில் அமரச் செய்தேன். அப்போது உதயன் பத்திரிகை ஆசிரியர் ந.வித்தியாதரன், ரூபன் மரியாம்பிள்ளை அடிகளார் அமைத்த பாதுகாவலன் மேடையில்த்தான் யாழ்ப்பாணத்தின் எல்லாப் பத்திரிகை ஆசிரியர்களும் தமது வேற்றுமைகள் மத்தியில் ஒன்றாக அமர முடியும் எனப் பகிரங்கமாகத் தெரிவித்தார்.

(10) பாதுகாவலன் பத்திரிகையின் 125ஆவது ஆண்டு நிறைவுக் கொண்டாட்டத்தின் போது வலம்புரிப் பத்திரிகை பாதுகாவலன் பத்திரிகை பற்றியும் அதில் எனது




பணி பற்றியும் பாதுகாவலன் பணி ஓங்குக என்ற தலைப்பில் ஓர் ஆசிரியர் தலையங்கம் எழுதிக் கௌரவப்படுத்தியது. (வலம்புரி ஆசிரியர் தலையங்கம் 04- 08- 2011)

(11) 2003ஆம் ஆண்டு மீண்டும் இலங்கை பத்திரிகையாளர் சங்கத்தின் சிறந்த பிரதேச ரீதியாக வெளியிடப்படும் பத்திரிகை என்ற தேசிய விருதை பாதுகாவலன் பத்திரிகை பெற்றது.

(12) 2003ஆம் ஆண்டு கத்தோலிக்க அச்சக கட்டடத் தொகுதி என்ற பெயரில் புதிய அலுவலகம் மற்றும் வாடகைக்கு விடப்படும் கட்டிடம் கட்டத் திறந்து வைக்கப்பட்டது.

(13) 2006ஆம் ஆண்டு கத்தோலிக்க அச்ச வளாகத்தில் அமரர் இ.யே.அருமைநாயகம் அடிகளாரால் ஆரம்பிக்கப்பட்ட கீழ் மாடிக் கட்டடம் முழுமையாக்கப்பட்டு பழைய கட்டடத்தில் இருந்து அச்சக இயந்திரங்கள் அனைத்தும் புதிய கட்டடத்திற்கு கொண்டு வரப்பட்டது. இதன் மேல் மாடி கட்டி முடிக்கப்பட்டு வாடகைக்கும் மற்றைய தேவைகளுக்கும் கொடுக்கப்படக்கூடிய பாதுகாவலன் மண்டபம் திறந்து வைக்கப்பட்டது.

2007ஆம் ஆண்டு யாழ் பல்கலைக்கழக புலமைப்பரிசிலுடன் ஊடகவியல் ஆய்வுக் கல்விக்காக லண்டன் மாநகர் சென்றதோடு எனது 1997-2007 பத்து ஆண்டு கால பாதுகாவலன் ஆசிரியப் பணி நிறைவானது.

உதயன் பத்திரிகையில் 2015-2019 வரை ஒவ்வொரு ஞாயிறு தோறும் கிறிஸ்தவ செய்தி இதழ் என்ற ஒரு கட்டுரைப் பக்கத்தை நடத்தி வந்துள்ளேன். 2021ஆம் ஆண்டு முதல் இது மாற்றப்பட்டு ஒவ்வொரு சனிக்கிழமைகள் தோறும் உதயன் பத்திரிகையில் கத்தோலிக்க செய்தி இதழ் வெளிவந்து கொண்டிருக்கின்றது. இதனைவிட காலைக்கதிர் பத்திரிகையில் 2016ஆம் ஆண்டு முதல் காலைக்கதிர் கிறிஸ்தவ செய்தி இதழ் என்னும் பெயரில் ஒவ்வொரு ஞாயிறு தினமும் ஒரு செய்திப் பக்கத்தை நடத்தி வருகின்றேன். இருப்பினும் என்னை எழுத்துத் துறைக்கும் ஊடகத்துறைக்கும் அறிமுகப்படுத்தி வளர்த்து விட்ட பாதுகாவலன் பத்திரிகையை எனது பத்திரிகையாகவே என்றும் கருதிப் பணியாற்றுகிறேன்.

# சீனாவை நாறடிக்கும் ஜெனிவா அறிக்கை!


இந்திய வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் அரிந்தம் பாக்சி.

சீனாவின் ஜின்ஜியாங் பிராந்தியத்தில் மத சிறுபான்மையினருக்கு எதிரான 'மோசமான மனித உரிமை மீறல்கள' குறித்து ஐ.நா. மனித உரிமைகள் அலுவலகத்தின் அறிக்கையை கவனத்தில் கொண்டதாக இந்தியா வியாழக்கிழமை தெரிவித்துள்ளது.

சின்ஜியாங்கில் சிறுபான்மையினரைக் கடுமையாகத் துன்புறுத்துவது குறித்த அறிக்கை என்பது எங்கள் புரிதல். ஆனால் இது ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் அறிக்கை. எனவே இந்த நேரத்தில் ஐ.நா. இது குறித்து கருத்து தெரிவிக்கட்டும் என்று இந்திய வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் அரிந்தம் பாக்சி கூறினார்.

சிஞ்சியாங்கில் சிறுபான்மையினரைக் கடுமையாகத் துன்புறுத்துவது பற்றிக் குறிப்பிடுவதைத் தவிர, இப்போதைக்கு நான் எதுவும் கூறவில்லை என்று அவர் அறிக்கை பற்றிய கேள்விக்கு ஒரு செய்தியாளர் மாநாட்டில் அவர் பதிலளித்தார்.

மே மாதம் சீனாவிற்கு ஐ.நா. மனித உரிமைகள் உயர் ஆணையர் மிச்செலி பச்சலெட் அம்மையார் மேற்கொண்ட பயணத்தை அடுத்து நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட இந்த அறிக்கை, கடைசியாக தாமதமாக கடந்த புதன்கிழமை வெளியிடப்பட்டது.

பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறைகள் தொடர்பிலான தனிப்பட்ட சம்பவங்களின் குற்றச்சாட்டுகள் நம்பகமானவை போன்று சித்திரவதை



உய்குர்கள் மற்றும் சின்ஜியாங்கில் உள்ள இதர முஸ்லிம்களுக்காகக் குரல் எழுப்பும் சர்வதேச சமூகம்.


சின்ஜியாங்கிற்கு ஐ.நா. மனித உரிமைகள் உயர் ஆணையர் மிச்செலி பச்சலெட் அம்மையார் மேற்கொண்ட பயணத்தின்போது சீனத் தலைவருடன்.

கள் அல்லது பலவந்த சிகிச்சையளித்தல் உட்பட கேவலமாக நடத்தப்படல், தடுப்புக்காவலின் பாதகமான நிலைமைகள் பற்றிய குற்றச்சாட்டுகளும் நம்பகமானவை என்று அந்த அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

அடிப்படை உரிமைகள் பறிக்கப்பட்ட சூழலில், உய்குர்கள் மற்றும் சின்ஜியாங்கில் உள்ள இதர முஸ்லிம் சமூகங்களைச் சேர்ந்தவர்கள் விரிவான தன்னிச்சையான தடுப்புக்காவல்களில் வைக்கப்படுகின்றமை 'சர்வதேச குற்றங்களாக, குறிப்பாக மனித குலத்திற்கு எதிரான குற்றங்களாக உருவகப்படுத்தப்படலாம் என்று திணுக்குற வைக்கும் விதத்தில் அந்த அறிக்கை முடிவு செய்துள்ளது.

வடக்கு எல்லையில் சீனாவின் 'அத்துமீறல்'பற்றிய ஜேர்மன் தூதர் பிலிப் அக்கர்மேன் கருத்துக்கள் பற்றிய மற்றொரு கேள்விக்கு பதிலளித்த பாக்சி, உலக சமூகத்திற்குள் இந்த பிரச்சினையில் இந்தியாவின் நிலைப்பாட்டிற்கு சரியான மெச்சுதல் இருப்பதாகக் கூறினார்.

"எல்லைப் பிரச்சினையில் எங்களின் நிலைப்பாடு தெளிவானது மற்றும் நிலையானது. சர்வதேச சமூகத்தில் இதற்கு சரியான பாராட்டு இருப்பதாக நாங்கள் நம்புகிறோம்," – என்றார் அரிந்தம் பாக்சி.

அருணாச்சலப் பிரதேசம் மீதான சீனாவின் உரிமை கோரல் 'அபாண்டமானது' என்றும், இந்தியாவின் வடக்கு எல்லையில் அதன் அத்துமீறல் சர்வதேச ஒழுங்கை மீறும் செயலாகும் என்பதால் அதை ஏற்றுக் கொள்ள முடியாது என்றும், அக்கர்மன் செவ்வாயன்று செய்தியாளர்களிடம் தெரிவித்திருந்தார்.

புதுடெல்லியில் உள்ள சீனத் தூதரகத்தின் செய்தித் தொடர்பாளர் புதன்கிழமை ஒரு டுவீட்டில், ஜேர்மன் தூதரின் கருத்துக்கள் பொறுப்பற்றவை என்றும், சீனாவிற்கும் இந்தியாவிற்கும் இடையிலான எல்லைப் பிரச்சினை காலனித்துவவாதிகள் விட்டுச் சென்ற வரலாற்றுச் சுமை என்றும் கூறினார்.

(மூலம்: 'ஹிந்துஸ்தான் ரைம்ஸ்')

# ஐக்கிய அரபு எமிரேட்ஸுடன் இந்திய தேசம் மிக நெருக்கமான உறவுகளை விரும்புகிறது

## அந்நாட்டுக்கான விஜயத்தின்போது ஜெய்சங்கர் தெரிவிப்பு



ஐக்கிய அரபு எமிரேட்ஸும் இந்தியாவும் ஒரு வரலாற்றுத் தொடர்பைப் போற்றுகின்றன, மேலும் இரு பொருளாதாரங்களின் நவீனத்துவத்தின் பகிரப்பட்ட உணர்வு பல வாய்ப்புகளையும் நன்மைகளையும் உருவாக்குகிறது என்று இந்தியாவின் வெளியுறவுத் துறை அமைச்சர் கலாநிதி சுப்ரமணியம் ஜெய்சங்கர் தலைநகர் அபுதாபியில் வியாழக்கிழமை தெரிவித்தார்.

அன்வர் கர்காஷ் இராஜதந்திர அகாடமியில் (ஏ.ஜி.டி.ஏ.) நிரம்பிய மண்டபத்தில் உரையாற்றிய அமைச்சர், ஐக்கிய அரபு எமிரேட்ஸின் முன்னோக்கிச் சிந்திக்கும் அர்ப்பணிப்புகளைப் பாராட்டினார்.

ஐக்கிய அரபு எமிரேட்ஸ் உண்மையிலேயே ஓர் உலகுடன் தொடர்புறுவதற்கான மிக நெருக்கமான பாதையாக மாறியிருப்பது எனக்கு மிகவும் கவர்ச்சிகரமானதாக இருக்கிறது... ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஒரு நாடாகவும், டுபாய் ஒரு நகரமாகவும், நிச்சயமாக (உலகின் முதல் ஐந்து உலகளாவிய இடங்களாக) இடம் பெறும் என்று டாக்டர் ஜெய்சங்கர் கூறினார்.

"நவீனத்துவம் மற்றும் முற்போக்கான உணர்வும் உள்ளது. ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மற்றும் இந்தியா பகிர்ந்து கொள்ளும் உறவுகள் நிகழ்காலம் மற்றும் கடந்த கால பிரச்சினைகளில் மட்டும் கவனம் செலுத்துவதில்லை. அடிவானத்தில் உள்ள வாய்ப்புகள் மற்றும் சவால்களை எதிர்கொள்ள முயற்சிக்கும் அரசியல் இது. உதாரணத்திற்கு, ஒரு பெரிய எண்ணெய் உற்பத்தியாளருக்கு (ஐக்கிய அரபு எமிரேட்ஸ் போன்ற) புதுப்பிக்கத்தக்க பொருள்களுக்கு இவ்வளவு பெரிய அர்ப்பணிப்பு இருப்பது மிகவும் சுவாரஸ்யமாக உள்ளது. இந்தியாவிற்கு, இந்த உறவுச் சங்கமம் மிகவும் பயனுள்ளதாக இருந்தது, ஏனெனில் அது நமது சிந்தனையை வடிவமைக்கிறது மற்றும் கூட்டிணைக்கிறது. மேலும் மற்றொரு நவீன சமுதாயத்துடன் பணியாற்றுவதற்கான வாய்ப்பை வழங்குகிறது, அதனால்தான் இங்கு வருவது எப்போதும் மகிழ்ச்சி அளிக்கிறது, என்று அவர் மேலும் கூறினார்.

### உயர்மட்ட வருகை

அன்வர் கர்காஷ் இராஜதந்திர அகாடமியின் இயக்குநர் நிக்கோலாய் ஷம்லாடெனோவ் உடனான கலந்துரையாடலின் போது அமைச்சர் இந்த கருத்தை தெரிவித்தார். அதில் இந்தியாவின் எதிர்கால வாய்ப்புகளுடன் உலக பொருளாதாரங்கள் மற்றும் அரசாங்கங்களின் எதிர்கால நிலை குறித்தும் அவர் விவாதித்தார்.

கலாநிதி ஜெய்சங்கர் ஐக்கிய அரபு எமிரேட்ஸில் தமது இந்த மூன்று நாள் பயணத்தில் இரு நாடுகளுக்கும் இடையிலான விரிவான மூலோபாயக் கூட்டாண்மையை ஆய்வு செய்ய உள்ளார். ஐக்கிய அரபு எமிரேட்ஸ் வெளியுறவு மற்றும் சர்வதேச ஒத்துழைப்பு அமைச்சர் ஷேக் அப்துல்லா பின் சயீத் அல் நஹ்யானுடன் இணைந்து இந்த மதிப்பாய்வு நடத்தப்படும், மேலும் இரு அலுவலர்களும் 14 ஆவது இந்தியா – ஐக்கிய அரபு எமிரேட்ஸ் கூட்டு ஆணையக் கூட்டத்திலும், மூன்றாவது இந்தியா – ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மூலோபாய உரையாடலிலும் கலந்துகொள்வார்கள்.

### 'இயல்பான உறவு'

இந்தியா மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸின் 'இயல்பான உறவு' மற்றும் புரிதல் பற்றி இந்திய அமைச்சர் நீண்ட நேரம் பேசினார். மேலும் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையைப் பாதுகாக்கும் பலதரப்பு உறவுகளுக்கும் அவர் அழைப்பு விடுத்தார்.

இந்தியாவின் வர்த்தக வரலாற்றை சுட்டிக்காட்டிய அவர் உலகின் எங்கள் பகுதிகளில் ஆரம்பகால நடவடிக்கைகளில் பிரதேசம் ஒன்றாகும் என்றார் அவர். உலகின் இந்த பகுதி வரலாற்று ரீதியாக எங்களுடன் இணைக்கப்பட்டுள்ளது, என்றும் அவர் கூறினார்,

உலகம் நிச்சயமற்றதாகவும், கொந்தளிப்பாகவும் இருப்பதால், வசதியான உறவுகள் இருக்கும் இடத்தில் இது அர்த்தமுள்ளதாக இருக்கிறது, மேலும் ஒருவரையொருவர் புரிந்துகொள்வதற்கும் வேலை செய்வதற்கும், அந்த உறவுகளை வளர்ப்பதற்கும், ஸ்திரத்தன்மை மற்றும் ஒத்துழைப்பின் இந்த காரணிகளை உருவாக்குவதற்கும் உள்ளுணர்வு திறன் உள்ளது, என்று டாக்டர் ஜெய்சங்கர் கூறினார். .

உதாரணமாக, கொவிட் – 19 முடக்கத்தின் போது – இந்தியாவில் நாங்கள் கடுமையான பிரதிபலிப்புகளில் ஒன்றைச் சந்தித்தோம். வளைகுடாவிற்கு உணவு விநியோகம் திறக்கப்பட்ட ஒரேயொரு பாதை. நாங்கள் அதை வெறும் ஒப்பந்தப் பற்றுறுதியாக மட்டும் பார்க்கவில்லை. இது ஒரு சமூக புரிதல் மற்றும் பச்சாதாபம் என்று ஒரு உணர்வு இருந்தது. என் கருத்துப்படி, இது எங்களுக்கு இயல்பான உறவு. உலகின் மற்ற பகுதிகளுக்கு இந்த பிராந்தியத்தின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு – மற்றும் ஆற்றல் மட்டுமே அதில் ஒரு காரணியாக உள்ளது – நாம் ஸ்திரத்தன்மைக்கு பங்களிக்க முடிந்தால், நாம் உலகிற்கு நன்மை செய்கிறோம், என்று அவர் கூறினார்.

### பரந்த உலகமயமாக்கல் நன்மைகள்

காலனித்துவத்தின் முடிவு, உலகமயமாக்கல். தவிரவும் தன்னைத்தானே புதுப்பித்துக் கொள்ளும் அமெரிக்கா மற்றும் இந்தியா போன்ற நாடுகளின் அதிகரித்து வரும் ஆனால் தவிர்க்க முடியாத உலகளாவிய ஈடுபாடு உள்ளிட்ட மாறிவரும் உலக ஒழுங்கு பற்றிய கேள்விகளுக்கும் அவர் தமது உரையில் பதில் கூறினார்.. உலகமயமாக்கப்பட்ட உலகில் சமத்துவம் மற்றும் நேர்மைக்காக வாதிடும் டாக்டர் ஜெய்சங்கர், உலகமயமாக்கலின் உண்மையான பிரச்சினை சமூகங்களுக்குள் உள்ள வளங்களின் அதிகப்படியான செறிவு என்றார்.

காலைக்கதிர்
Kalaikkathir

**இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.**

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## அரசியல் செயலாளர்களின் கணிப்புகள்



- செல்லத்துரை ரவீந்திரன் -

**அங்கம் - 112**

இந்தியத் தூதரகச் செயலாளர் நாட்டில் பல அரசியல், சமூக,மதத் தலைவர்கள், புத்திஜீவிகள், பல்கலைக்கழக மாணவர் அமைப்புகள் எனப் பல தரப்பினரிடமும் அபிப்பிராயங்களுக்காகக் கலந்துரையாடினர்.


அதேசமயம் புலம்பெயர் சமூகங்களில் இருந்தும் அவர்களுக்குப் பல விதங்களில் புத்திமதிகளும் அறிவுறுத்தல்களும் வந்த வண்ணமே இருந்தன.

அவர்கள் பெற்ற அபிப்பிராயங்களின் படி, சிங்கள மக்கள் எந்தக் கட்டத்திலும் சமஷ்டி முறையை ஏற்றுக் கொள்ளப் போவதில்லை, ஒப்பந்தம் அதிகாரப் பரவல்தான், அது பிரிவினை அல்ல என விளங்கப்படுத்தியும், அது சமஷ்டி என்ற பெயரைக் கொண்டதல்ல என்பதைத் தெளிவுபடுத்தியும் கூட, அவர்கள் அவற்றை எல்லாம் பிரிவினைக் கண் கொண்டே பார்த்தார்கள்.

விடுதலைப் புலிகளைப் போலவே ஜே.வி.பியும் வன்முறை வாதிகள்தான், அவர்களும் தங்களது மக்களது உரிமைகளுக்காக – அரச பயங்கரவாதத்திற்கு எதிராக – போராடுகிறார்கள், அவர்களைப் பற்றிய புரிந்துணர்வுகள் வரவேண்டும் எனக் கேட்ட பொழுதும், பெரும்பான்மையோர் அவர்கள் (ஜே.வி.பியினர்) தேசியப் பற்றுள்ள தங்கள் மக்களது அமைப்பு, ஒரு சோசலிசப் புரட்சியை ஏற்படுத்தி, நாட்டின் நடைமுறைகளை மாற்றப் பாடுபடுகிறார்கள், அவர்கள் நாட்டைத் தாய் நாடாகப் பார்க்கிறார்கள், ஆனால் விடுதலைப் புலிகளோ பிரிவினைக்கான வன்முறை வாதிகள், ஆகவே அவர்கள் அழிக்கப்பட வேண்டும் என்றும், அப்படியானவர்களுக்கு அனுதாபம் எதுவும் காட்டக்கூடாது



சுந்தர்ஜி



ஜே.ஆர்.

எனவும் உறுதியாக இருந்தார்கள்.

ஆதலால் ஜே.ஆர். இனப்பிரச்சினை தீர்வுக்காக சிங்கள தரப்புகளிடையே பல விட்டுக்கொடுப்புகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும் அல்லது விடுதலைப் புலிகளை அழித்துவிட்டேன், ஆதலால் தமிழ் மக்களுக்குச் சில சலுகைகள் தர வேண்டும் என்ற அணுகுமுறையில் போக வேண்டும் என அபிப்பிராயப்பட்டார்கள்.

இதே ஒத்திசைவைத்தான் பின்னர் மஹிந்த கைப்பிடித்து, பயங்கரவாதிகளான விடுதலைப் புலிகளை எல்லோரும் ஒன்று சேர்ந்து ஒழிப்போம், அதன் பின் தானே முன் நின்று தமிழ் மக்களுக்கு 13 பிளஸ், பிளஸ் தருவேன் என வெற்றிலைகள் வைத்தமையால், அவருடைய அதிகாரமும் கொட்டமும் அந்த வெற்றியில்தான் உறுதி கொண்டன.

நாட்டின் ஜனத்தொகையில் தமிழ் மக்கள் எட்டில் ஒரு பகுதியினரே. வடக்கும் கிழக்கும் இணைந்த மாகாணங்களாக அவர்களால் (தமிழ் மக்களால்) அது நிர்வகிக்கப்பட்டால் நாட்டில் மூன்றில் ஒரு பகுதி காணி விஸ்தீரணத்தையும், மூன்றில் இரண்டு பங்கு கடல் எல்லைப் பகுதியையும் அவர்களே ஆள்வார்கள், அதனைச் சிங்கள மக்கள் ஏற்க தயார் இல்லை, ஆகவே ஒப்பந்தம் சிங்கள மக்களுக்கு எதிரான பலவந்தமான திணிப்பாகவே நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பது அவர்கள் கருத்து.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை குறிப்பிடப்பட்ட காணி எல்லைகளும் கடற்பகுதிகளும் அவர்களது பாரம்பரிய பிரதேசங்கள். ஆகவே அவை பேரம் பேசப்படக்கூடிய விடயங்கள் அல்ல. சுதந்திரத்தின் பின் அவை அரசாங்கங்களால் அத்துமீறிக் குடியேற்றப்பட்டமையால் அவை மீளக் கையளிக்கப்பட வேண்டும் என்று நியாயமான வாதங்களே மேலோங்கி நின்றன.

இந்த இறுக்கமான, இக்கட்டான நிலையில் தமிழர் தரப்புக்களைப் பொறுத்தமட்டில் அவர்களுக்கு சாதகமாக உள்ள ஒப்பந்தத்தை நிறைவேற்றிக் கொண்டு முன்னேறப் பொறுமையும் சாதுரியமும் தேவை. அவற்றைப் பக்க பலமாக்கிக் காரியங்களை ஆற்ற வேண்டும்.

ஆனால் அப்படியான தலைமைத்துவம் எழுவதற்கான சாத்திய கூறுகள் அரிதாக இருந்தன. எல்லாவற்றிற்கும் முக்கியமாக பிரபாகரனோ, விடுதலை புலிகளோ ஆயுதங்களை கைவிடப்போவதில்லை, தமிழீழத்தை உருவாக்க வேண்டும் என்ற திடசித்தத்தை அவர்கள் மாற்றப்போவதும் இல்லை. தமிழ் மக்களுக்கு இன்று விடுதலைப் புலிகளின் ஆயுதப் பலமே அத்திபாரமாக, அவர்களது ஆஸ்தியாக உள்ளது. ஆதலால் விடுதலைப் புலிகள் அவற்றைக் கைவிடுவார்கள் என எதிர்பார்ப்பது நடக்கக்கூடியது அல்ல. தமிழீழம் அமைவதை சிங்கள மக்களும்



கே.சி.பந்த்

ஏற்கப் போவதில்லை. அதனை இந்திய அரசும் ஆதரிக்கப் போவதில்லை. ஆகவே ஒப்பந்தம் இருந்தும் இனப்பிரச்சினைக்கான தீர்வு கையில் எட்டுவதாகக் காணவில்லை.

ஆகவே இவை அரசியல் ரீதியாக இந்திய அரசின் மேல் மட்டத்தினால் கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாக அவர்கள் பார்த்தார்கள்.

இந்தப் பின்னணியில்தான் நிருபம் சென்னின் புதுடெல்லி விஜயத்தின் பின், ஜே.ஆரின் அழைப்பில் இந்தியப் பாதுகாப்பு மந்திரி கே.சி.பந்த், இந்தியாவின் இராணுவத் தளபதி சுந்தர்ஜியையும் கூட்டிக்கொண்டு ஜே.ஆருடனான சந்திப்புக்கு வந்தார். இந்தச் சந்திப்பு 1987 ஒக்டோபர் 7ஆம் திகதி நடந்தது. ஆனால் அதற்கு முன் இராணுவத் தளபதி சுந்தர்ஜி 6 ஒக்டோபர் யாழ்ப்பாணம் சென்று, அங்கிருந்த இந்திய இராணுவத் தளபதிகளுடன் பேச்சுகளை அன்றைய நிலைவரங்களை ஒட்டி நடத்தினார். ஜே.ஆருடனான சந்திப்பில் விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள் பலவந்தமாக களையப்படும் என அவருக்கு சுந்தர்ஜியால் தெரிவிக்கப்பட்டதாகவும், அதனைத் தொடர்ந்து ஒக்டோபர் 10 விடுதலைப் புலிகளுக்கு எதிரான தாக்குதல்கள் தொடங்கின எனவும் மதியுரைஞர் பாலசிங்கம் குறிப்பிடுகிறார்.



பாலசிங்கம்

அது, அவர் சார்ந்திருந்த பகுதியின் கணிப்பு என்பது பலரின் அபிப்பிராயம். ஏனெனில் சில இடைப்பட்ட சம்பவங்களையும், சந்திப்புக்களில் நடந்தவற்றையும் அவர்கள் கோடி காட்டாது விடுகிறார்.

அதே சமயம் ஒப்பந்தத்தின் ஆக்கத்திற்குப் பிறகு பிரபாகரனோடும் விடுதலைப் புலிகளுடனும் ஆயுதங்கள் பற்றியும், மேல் நடக்க வேண்டியவை பற்றியும் இந்தியத் தூதரக அதிகாரிகள் மற்றும் புலனாய்வுப் பிரிவினர், றோ தரப்பினர் போன்றோர் பேசியவையும், அவற்றில் விடுதலைப்புலிகளின் நிலைப்பாடுகளும் இந்தியாவிற்கு சாதகமானவையாகவோ, நம்பிக்கை தருவனவாகவோ இருக்க



பிரபாகரன்

வில்லை.

ஆகவே இவைபற்றியெல்லாம் தீர்மானிக்கும் பொறுப்பு இந்திய அரசின் மேல் தட்டு அதிகாரிகள் மற்றும் அரசியல் தலைவர்களிடம் தூதரகச் செயலாளர்களினால் விடப்பட்டன.

(வளரும்...)

காலைக்கதிர்
Kalaikkathir

## ஜனாதிபதி ரணிலுடன் ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி., செயலாளர் நாயகம் கோவிந்தன் கருணாகரம் (ஜனா) எம்.பி. மற்றும் ரெலோவின் தேசிய அமைப்பாளரும் ஊடகப்பேச்சாளருமான சுரேந்திரன் ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

முற்பகல் 11.30 மணி தொடக்கம் நண்பகல் 12.15 மணி வரை கிட்டத்தட்ட 45 நிமிடங்கள் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

முதலாவதாக குரல் அற்றோர் குரல் அமைப்பினரின் வேண்டுகோளைச் சுட்டிக்காட்டி அவர்களால் கையளிக்கப்பட்ட அரசியல் கைதிகள் விபரம் ஜனாதிபதியிடம் வழங்கப்பட்டது. 24 அரசியல் கைதிகள் தண்டனை வழங்கப்பட்டு இருப்பதனாலே நேரடியாக ஜனாதிபதியின் உத்தரவில் விடுதலை செய்யப்பட முடியும் என்றும், காலதாமதம் இன்றி அவர்களை விடுவிக்குமாறும் கோரப்பட்டது.

மேலும் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் 22 அரசியல் கைதிகள் ஜனாதிபதியின் விசேட மன்னிப்பால் விடுதலை செய்ய முடியும். தண்டனை வழங்கிய பின்னர் தான் விடுதலை செய்ய முடியும் என்ற அரசமைப்பு நிலைப்பாட்டைக் கருத்தில் கொள்வதாக இருந்தால் இனி வழக்குத் தொடுத்து தீர்ப்புகள் வழங்கப்படுவது இந்த அரசியல் கைதிகளின் விடுதலையில் காலதாமதத்தையே ஏற்படுத்தும்.

அதேநேரம் நல்லாட்சி அரசின் காலத்தில் புனர்வாழ்வு அளிக்கும் முறைமையின் கீழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யலாம் என்ற திட்டத்தை அப்போது பிரதமராக இருந்த தற்போதைய ஜனாதிபதி நடைமுறைப்படுத்த முற்பட்டதும் நினைவுகூரப்பட்டது.

குரல் அற்றோர் குரல் அமைப்பினர் வேண்டுகோளின் அடிப்படையில் இந்த அரசியல் கைதிகளை விரைந்து விடுதலை செய்யும் பொறிமுறை, அது குறுகிய காலப் புனர்வாழ்வின் அடிப்படையாக இருந்தாலும் ஏற்றுக்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

தண்டனை வழங்கப்பட்ட 24 அரசியல் கைதிகளையும் உடனடியாக விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும், மற்றவர்களுடைய விடுவிப்பு சம்பந்தமாக நீதி அமைச்சருடன் கலந்தாலோசித்து விரைவான நடவடிக்கை எடுப்பதாகவும் ஜனாதிபதி உறுதியளித்தார்.

மேலதிகமாக தடுப்பில் உள்ள 38 அரசியல் கைதிகளுக்கு எதிராக எந்தக் குற்றங்களும் இல்லாததால் ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரையின்படி அவர்களை விடுவிக்க முடியும் என்றும் சுட்டிக் காட்டப்பட்டது.

இரண்டாவதாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் விடயம் பற்றி பேசப்பட்டது. வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சம்பந்தமான தகவல்களைத் திரட்டுவதற்குச் சர்வதேச மேற்பார்வையுடனான பொறிமுறையே அவசியம் என்பதை கூட்டமைப்பு தொடர்ந்தும் வலியுறுத்தி வந்தது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளும் அதையே வலியுறுத்திப் போராட்டங்களை நடத்தி வருகின்றார்கள்.

உள்ளகப் பொறிமுறையில் நம்பிக்கையற்ற நிலையில் சர்வதேச மேற்பார்வையுடன் கூடிய பொறிமுறையே காணாமல் ஆக்கப்பட்டவர்களுகான நீதியைப் பெற்றுத் தரும் எனத் தொடர்ந்தும் கோரி வருகின்றோம். எனவே, அதற்கு அரசு இணங்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.

ஐ.நா. அமர்வுகளுக்குப் பின்னராக நீதி அமைச்சருடன் அதற்கான குழு ஒன்றை அமைத்து தமிழர் தரப்புடனும் கலந்தாலோசித்து நடவடிக்கை எடுக்க ஆவன செய்வதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

மூன்றாவதாக கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தைத் தரம் உயர்த்துகின்ற வேலைத்திட்டத்தை இனிமேலும் பின்போடாது நடைமுறைப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. ஏற்கனவே நல்லாட்சி காலத்தில் அதற்கான அமைச்சரவைப் பத்திரம் தயாரிக்கப்பட்டிருந்தது. அது நிறைவேற்றப் படாமல் போனது துரதிர்ஷ்டவசமானது.

ஒரு நிர்வாக ரீதியான தரம் உயர்த்தலுக்கு அரசியல் காரணங்களைக் காட்டிப் பிற்போடுவது அந்த மக்களைத் துன்பத்தில் ஆழ்த்துவதாக அமையுமே தவிர எத்தரப்புக்கும் நன்மை பயக்காது என்று எடுத்துரைக்கப்பட்டது. அதை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி விரைந்து அதைச் செயற்படுத்தித் தருவதாக உறுதியளித்தார்.

நான்காவதாக எரிபொருள் தட்டுப்பாட்டா ல் குறிப்பாக வடக்கு, கிழக்கு மீனவர்கள் தொழில் செய்ய முடியாமல் படும் தொடர் துன்பப்படுவதால் அவர்களுடைய பிரச்சினை உடனடியாகத் தீர்த்து வைக்கப்பட வேண்டும் என்றும் கோரப்பட்டது.

வரவு - செலவுத் திட்டத்தில் விவசாயிகளுக்குத் தாங்கள் முன்மொழிந்த சலுகைகளை வரவேற்கின்றோம். அதேநேரம் விதைப்புக் காலம் ஆரம்பித்திருக்கும் இவ்வேளையில், ஏற்கனவே உரங்களுக்கு விதிக்கப்பட்ட தடைகளாலும் எரிபொருள் விலையேற்றத்தாலும் விவசாயிகள் பெரும் பாதிப்படைந்துள்ளனர்.

தற்போது அவர்களுக்கான உரம் மற்றும் கிருமிநாசினிகள் என்பவை சரியான நேரத்துக்கு வழங்கப்படாதவிடத்து எதிர்வரும் போகத்தில் பாரிய சிக்கலை அவர்கள் எதிர்நோக்க வேண்டியிருக்கும்.

இந்தப் போகத்தில் விவசாயம் பாதிக்கப்படுமாக இருந்தால் நாடு ஒட்டுமொத்தமாக உணவுப் பஞ்சத்தில் வீழ்ந்துவிடும். சர்வதேச தொண்டு நிறுவனங்களிடமாவது உதவிகளைப் பெற்று இந்தப் பிரச்சினைக்கு அவசர முடிவு காண வேண்டிய அவசியம் குறித்து வலியுறுத்தப்பட்டது.

காணி அபகரிப்பைத் தடுத்து நிறுத்தல், இராணுவப் பிரசன்னத்தைக் குறைத்தல் என்பவற்றை பிரஸ்தாபித்தபோது காணி கையகப்படுத்தலை உடனடியாகத் தடுத்து நிறுத்துவதாகவும், இராணுவப் பிரசன்னத்தை பாதுகாப்புச் சபையின் ஊடாக கட்டங்கட்டமாக குறைக்கும் நடவடிக்கையை எடுப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

புலம்பெயர் அமைப்புக்களின் தடைகளை நீக்குவதோடு, புலம்பெயர் முதலீட்டாளர்கள் சம்பந்தமான அரசியல் அதிகார ரீதியான மற்றும் பாதுகாப்பான கட்டமைப்புகளை உருவாக்குவதன் மூலமே அவர்களை நம்பிக்கைகொள்ள வைக்க முடியும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

முக்கியத்துவத்தின் அடிப்படையில் தான் எல்லா விடயங்களுக்கும் அவசியமான மற்றும் அவசரமான நடவடிக்கைகளை எடுப்பதாக ஜனாதிபதி உறுதியளித்தார் - என்றுள்ளது.

## அத்தியாவசிய ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரணில் விக்கிரமசிங்கவால் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளயிடப்பட்டுள்ளது.

அதற்கமைய மின்சாரம், பெற்றோலிய உற்பத்தி, எரிபொருள் விநியோகம் மற்றும் சுகாதாரம் ஆகிய சேவைகள் அத்தியாவசிய சேவைகளாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

## கோட்டாவுக்குப் புதிய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடைக்கலம் தேடி அலைந்து திரிந்த கோட்டாபய ராஜபக்ஷ, நேற்றுமுன்தினம் நள்ளிரவு மீண்டும் நாடு திரும்பினார்.

தாய்லாந்தில் இருந்து சிங்கப்பூர் வழியாக கட்டுநாயக்க விமான நிலையத்தில் தனது மனைவியுடன் வந்திறங்கிய கோட்டாபயவை ஆளும் தரப்பு உறுப்பினர்கள் சிலர் நேரில் சென்று வரவேற்றனர்.

## தொலைபேசி......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீதத் தால் அதிகரிப்பதற்குத் தொலைபேசி நிறுவனங்கள் தீர்மானித் துள்ளனர்.

நாளை முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் அனுமதியுடன் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

## நாணய நிதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உட்பட பசுமைப் பொருளாதாரம் ஆகியவற்றில் தொடர்ந்தும் இலங்கையுடன் ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாக ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான பிரதிநிதிகள் குழு தெரிவித்துள்ளது.

## இலங்கைக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று குறிப்பிட்டுள்ளார்.

கடனாளிகளின் சமத்துவம் மற்றும் வெளிப்படைத்தன்மை ஆகியவை, பிரச்சினைகளுக்கு உள்ளான இலங்கை தேசத்திற்கு முக்கியமானவை என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியா, இலங்கைக்கு 3.8 பில்லியன் டொலர் உதவிகளை வழங்கியுள்ளது. இது பல்வேறு வடிவங்களில் இப்போது 4 பில்லியன்களாகி உள்ளது. தொடர்ந்தும் கடன் பற்றியும் ஏனைய விடயங்கள் பற்றியும் கலந்துரையாடப்படுகின்றது என்றும் அரிந்தம் பாக்சி கூறியுள்ளார்.

அண்மையில் பாகிஸ்தான் போர்க்கப்பல்ஒன்றுகொழும்புக்குவிஜயம்செய்தமை தொடர்பில் கருத்துத் தெரிவித்த அவர், இந்தியாவின் பாதுகாப்பைப் பாதிக்கும் வகையில் செயற்பாடுகள் ஏற்பட்டால், அவற்றை இந்தியா உன்னிப்பாக அவதானித்து அதனைப் பாதுகாக்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று தெரிவித்துள்ளார்.






# மருத்துவத்துறையில் விஞ்ஞானியாக வரவேண்டும் என்பதே எனது அவா!

## உயிரியல் துறையில் சாதனை மாணவன் துவாரகேஷின் இலட்சியம்



(வி.ரி.சகாதேவராஜா)

சர்வதேச பல்கலைக்கழகத்தில் பயின்று மருத்துவத் துறை விஞ்ஞானியாக வரவேண்டும் என்பது எனது இலட்சியம் என்று அகில இலங்கை ரீதியில் உயிரியல் துறையில் முதலாம் இடம் பெற்ற மாணவன் தமிழ்வண்ணன் துவாரகேஷ் தெரிவித்தார்.

வெளியாகியுள்ள உயர்தர பரீட்சை முடிவுகளின் படி அகில இலங்கை ரீதியில் உயிரியல் துறையில் முதலிடம் பெற்று சாதனை படைத்த காரைதீவைச் சேர்ந்த மாணவன் தமிழ்வண்ணன் துவாரகேஷ் அவர்களிடம் செவ்வி கண்டபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கிழக்கு மாகாண வரலாற்றில் அகில இலங்கை ரீதியில் கிழக்கு மாணவன் ஒருவன் முதலிடம் பெற்றது இதுவே முதல் தடவை.

அதுவும், முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் பிறந்த மண்ணில் பிறந்த துவாரகேஷ், மட்டக்களப்பு புனிதமிக்கேல் கல்லூரியில் பயின்று இந்த சாதனையை பதிவு செய்திருக்கிறார்.

அவரது தந்தையார் தோல் வைத்திய நிபுணர் தமிழ் வண்ணன், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் பணியாற்றுகிறார். அவரது தாயார் பகீரதி வைத்திய அதிகாரி. அவரும் அங்கு பணியாற்றுகின்றார்.

இவருக்கு இரண்டு சகோதரிகள் ஒருவர் உயர்தரம் பயில்கின்றார். மற்றயவர் தரம் பத்தில் பயில்கிறார். இருவரும் மட்டக்களப்பு சிசிலியா மகளிர் கல்லூரியில் பயில்கின்றனர். காரைதீவில் பிறந்து மண்டூரில் கரம்பிடித்த பண்டிதர் நல்லரத்தினம் அவர்களின் பேரன் துவாரகேஷ் ஆவார்.

அவர்கள் தற்போது மட்டக்களப்பிலே வாழ்ந்து வருகின்றார்கள்.

அவர் தொடர்பில் தெரிவித்தவை வருமாறு –

கேள்வி: அகில இலங்கை ரீதியில் நீங்கள் முதலிடம் வருவீர்கள் என்று எதிர்பார்த்திருந்தீர்களா?

பதில்: மாவட்ட மட்டத்தில் வருவேன் என்று தெரியும். இருந்தாலும் அகில இலங்கை ரீதியில் முதலிடம் என்பது நான் எதிர்பார்க்கவில்லை. முதன் முதலில் பரீட்சை முடிவை பார்த்தவுடன் மிகவும் சந்தோஷமாகவும் இருந்தது. அதிர்ச்சியாகவும் இருந்தது. எடுத்தவுடன் அம்மாவிடம் கூறினேன்.

கேள்வி: தங்களின் ஆரம்பக்கல்வி பற்றி கூறுங்கள்....?

பதில்: நான் ஆரம்பக் கல்வியை கல்முனை கார்மேல் பாத்திமாகல்லூரியில் இரண்டுவருடங்கள் படித்துவிட்டு புனித மைக்கேல் கல்லூரிக்கு வந்து விட்டேன். தந்தையும் தாயும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் வைத்தியர்கள் என்பதால் மட்டக்களப்புக்கு வர வேண்டிய சூழல்.

கேள்வி: நீங்கள் பெரும் சாதனை படைத்திருக்கின்றீர்கள். புலமைப் பரிசில் பரீட்சையில் 192 புள்ளிகள் பெற்று மாவட்டத்திலே அன்று சாதனை படைத்தீர்கள். இன்று மருத்துவத்துறையில் முதல் மாணவராகத் தேர்வாகி உள்ளீர்கள். இந்த சந்தோமான நேரத்தில் யாருக்காவது நன்றி செலுத்த விரும்புகிறீர்களா...?

பதில்: ஆம், முதலிலேயே என்னைப் படைத்த இறைவனுக்கும் அடுத்து அன்பையும் ஆதரவையும் தந்த பெற்றோர்களுக்கும் சகோதரர்களுக்கும் அடுத்து பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கேள்வி: கொரோனா கால கட்டத்தில் சிரமத்தின் மத்தியில் இந்த படிப்பை மேற்கொண்டு இருக்கின்றீர்கள். அது பற்றி.....?

பதில்: கொரோனாக் காலத்தில் முதலாம் வருடத்தில் ஒரு தவணையும் இரண்டாம் பருவத்திலே ஒரு தவணையும் தான் பாடசாலைக்குச் செல்ல முடிந்தது. ஏனைய நேரங்களில் நிகழ்நிலை வகுப்புகளிலும் கலந்துகொள்ளக் கூடியதாக இருந்தது. அப்போது நான் பாடசாலைக்கு 95 வீத வரவைப் பதிவு செய்தேன். சந்தோமாக இருந்தது.

கேள்வி: உங்களுக்கு அடுத்ததாக வருகின்ற மாணவர் சமுதாயத்துக்கு சொல்லக்கூடிய ஆலோசனை ஏதாவது இருக்கின்றதா?

பதில்: ஆம், கஷ்டப்பட்டு படிக்க வேண்டாம். கண் மூடித்தனமாக விடிய விடிய படிக்க வேண்டும் என்று படிக்க வேண்டாம். ஆழமாக திட்டமிட்டு ஸ்மார்ட் முறையில் படிக்க வேண்டும். கஷ்டப்பட்டு படிக்க படிக்க வேண்டும் என்பதற்காக உடலை வருத்த வேண்டும் என்பது இல்லை .உரிய முறையில் தேவையான பயிற்சி செய்து கேள்விகளை அதிகம் செய்து இந்த படிப்பை மேற்கொள்ள வேண்டும்.

கேள்வி: டியூசனை மட்டும் நம்பி உங்களது படிப்பு இருந்ததா....?

பதில்: அப்படி இல்லை, ரியூசனை மட்டும் நம்ப முடியாது. நாங்கள் பாடசாலையிலும் நிகழ்நிலை வகுப்புகளிலும் கூடுதலான நேரத்தைச் செலவிட்டேன். எனது படிப்பு இரவு 10:30 மணி வரைக்கும் இருக்கும். காலையிலே 4.30 மணி முதல் 5 மணி வரை நிச்சயமாக எழுந்து கொள்வேன்.

கேள்வி: படிப்பு நேரத்தில் கைபேசி மற்றும் தொலைக்காட்சி பாவனை எவ்வாறு இருந்தது?

பதில்: கைபேசி எமது படிப்புக்கு அத்தியாவசியமாக இருந்தது. அதற்கு மாத்திரம் அதனைப் பயன்படுத்தினேன். தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பெரிதாகப் பார்ப்பதில்லை.

கேள்வி: நீங்கள் பொது விவேக பரீட்சையிலே 90 புள்ளிகளைப் பெற்றுக் கொண்டுள்ளீர்கள்.

பதில்: ஆம், பொது விடயங்களில் எனக்கு பொதுவாக நாட்டம் இருந்தது. கல்வி ஒன்றுதான் எம்மை கௌரவத்தோடு வாழவைக்கும்.

# நாட்டையும் நாடாளுமன்றத்தையும் கப்ரால் தவறாக வழிநடத்தியுள்ளார்

## ஹர்ஷ டி சில்வா

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் நாட்டின் நிதி நிலைமை தொடர்பில் நாட்டையும் நாடாளுமன்றத்தையும் தவறாக வழிநடத்தியுள்ளார் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இடைக்கால வரவு - செலவுத்திட்டம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா இவ்வாறு குற்றம் சுமத்தியுள்ளார்.

எனவே தற்போதைய ஆளுநர் நந்தலால் வீரசிங்க நாட்டை வங்குரோத்து நிலைக்கு கொண்டு சென்றார் என குற்றஞ்சாட்டுவது அடிப்படையற்றது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தவறான குற்றச்சாட்டுக்களை முன்வைத்தால் பொருளாதார நெருக்கடிக்கு ஒருபோதும் தீர்வு காண முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பொருளாதார மீட்சிக்கான நடவடிக்கைகள், கடன் மறுசீரமைப்பு உள்ளிட்ட அடிப்படை விடயங்களுக்கு அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்கத் தீர்மானித்துள்ளதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா கூறியுள்ளார்.

எனினும், அரசாங்கத்தின் செயற்பாடுகள் தங்களது தீர்மானத்தைக் கேள்விக்குள்ளாக்கியுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடன் வழங்குநர்களுடன் பேச்சுகளை மேற்கொண்டு கடன் மறுசீரமைக்க மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் இடமளிக்கவில்லை.



பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்த காலப்பகுதியில் மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க நாட்டில் இருக்கவில்லை.

எனவே தவறான விடயங்களை முன்வைத்து போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைத்தால் பொருளாதார நெருக்கடிக்கு ஒருபோதும் தீர்வு காண முடியாது எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா கூறியுள்ளார்.

# ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றும் இயலுமை சுதந்திரக் கட்சிக்குள்ளது!

## முன்னாள் ஜனாதிபதி மைத்திரி நம்பிக்கை

நாடாளுமன்றத்தில் தற்போதுள்ள நிலைமையை அவதானிக்கும் போது , வெகுவிரைவில் ஏதாவதொரு தேர்தல் நிச்சயம் நடத்தப்படும். வரவிருக்கும் தேர்தல் எதுவாயினும், அதில் போட்டியிட்டு ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றும் இயலுமை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு காணப்படுவதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 71ஆவது ஆண்டு நிறைவு மாநாடு 02 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மஹர கமவில் இடம்பெற்ற போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

உறுப்பினர்களைக் கட்சியிலிருந்து நீக்குவதற்காக யாப்பில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவில்லை. கட்சியின் தீர்மானங்களுக்கு எதிராகச் செயற்படுபவர்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் சார்ந்த விடயங்களுக்காகவே கட்சி யாப்பில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குறித்த யாப்பு ஓர் எதிர்ப்பு வாக்கு கூட இன்றி நிறைவேற்றப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும்.

முற்போக்கான கட்சிகளுடன் இணைந்து பாரிய அரசியல் கூட்டணியொன்றை அமைத்து அதன் ஊடாக அடுத்த தேர்தலில் போட்டியிட்டு ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதே எமது இலக்காகும். தற்போதைய நெருக்கடிகளிலிருந்து மீள்வதற்கு சர்வகட்சி அரசாங்கம் அமைக்கப்பட வேண்டியது அத்தியாவசியமானதாகும். அதில் 225 நாடாளுமன்ற உறுப்பினர்களும் அங்கத்துவம் வகிக்க வேண்டும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் அவர் தலைமையிலான அரசாங்கத்துக்கும் உதவுவதற்கும் நாம் இதனைத் தெரிவிக்கவில்லை. 100 ரூபாவிற்காக 10 வயது சிறுவனை கத்தியால் தாக்கும் மனநிலைக்கு மக்களைக் கொண்டுள்ள இந்த சூழலை மாற்றிய மைக்க வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும். எனவே சர்வகட்சி அரசாங்கம் அமைக்கப்படாவிட்டால் நாம் அரசாங்கத்தில் எந்தவொரு பதவிகளையும் ஏற்கப் போவதில்லை.

நாடாளுமன்றத்தில் தற்போதுள்ள நிலைமையை அவதானிக்கும் போது விரைவில் நிச்சயம் ஏதாவதொரு தேர்தல் இடம்பெறும். வரவிருக்கும் தேர்தல் எதுவானாலும் அதில் போட்டியிட்டு வெற்றி பெறக் கூடிய இயலுமை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குக் காணப்படுகிறது. அது கடினமானது என்ற போதிலும், அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டால் அந்த முயற்சியும் வெற்றியளிக்கும். - என்றார்.

# நாடகமும் அரங்கியலும் இருநாள் பயிற்சிப் பட்டறை

திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் நாடகமும் அரங்கியலும் பாடத்தில் செய்முறைப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான இருநாள் பயிற்சிப் பட்டறை எதிர்வரும் 10ஆம்,11ஆம் திகதிகளில் (சனி,ஞாயிறு) காலை 8.30 மணி தொடக்கம் பி.ப.2.00 மணி வரை பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள 'மறைநதி' ஊடக மைய மண்டபத்தில் (மறைக்கல்வி நடுநிலைய வளாகம்) நடைபெறவுள்ளது.

இப் பயிற்சிப் பட்டறையில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் எதிர்வரும் 8 ஆம் திகதி வியாழக்கிழமைக்கு முன்பாக தமது பெயர், விவரங்களை யாழ். திருமறைக் கலாமன்ற அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றார்கள்.

# 120 மருந்துகளுக்கு பாரிய தட்டுப்பாடு!

## சுகாதார அமைச்சு

நாட்டில் 120 மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

14 உயிர்காக்கும் மருந்துகளின் பற்றாக்குறை நிவர்த்தி செய்யப்பட்டுள்ளதாக மருத்துவ தொழில்நுட்ப சேவைகளின் இயக்குநர் வைத்தியர் அன்வர் ஹம்தானி தெரிவித்தார்

இந்த நாள்களில் கான்டாக்ட் லென்ஸ்கள் மற்றும் செவிப்புலன் கருவிகள் பற்றாக்குறை சத்திரசிகிச்சை உபகரணங்கள் உள்ளிட்ட உபகரணங்களின் பற்றாக் குறையைப் போக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.09.2022இல் வெளியிடப்பெற்றது.